# மாணவர்க்கு...

## மாண்புமிகு மாணவர் சமுதாயம் மலர

தொகுப்பு

தமிழ்ச்சங்க ஆசிரியர் குழு

வெளியீடு

கிளிநொச்சி மாவட்டத் தமிழ்ச் சங்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவர்க்கு...

தொகுப்பு
தமிழ்ச்சங்க ஆசிரியர் குழு

வெளியீடு
கிளிநொச்சி மாவட்டத் தமிழ்ச்சங்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முகவுரை

மாணவர்களை மாண்புடையவராக ஆக்கும் பருவமே மாணவப் பருவம். குழுகாயத்தின் அல்லன - நல்லன இரண்டுமே மாணவர்களைக் கவருகின்றன. அதிலும் தீய சக்திகளே மாணவர்களை எளிதில் ஈர்க்கின்றது.

மாணவர்கள் பள்ளியை, கல்லூரியை விட்டு விலகும் போது அவர்கள் திசை மாறிப்போகாமல் ஒழுக்கமுடையவர்களாகவும் பண்பாட்டை பேணுபவர்களாகவும், சான்றோனாகவும் வாழ வேண்டும் என்ற வேட்கையில் இந்த நூல் தொகுக்கப்பட்டுள்ளது.

எனவே மாணவர்கள் இந்நூலைப் படித்து, வாழ்க்கையை வளப்படுத்திக் கொள்வார்களாக...

-ஆசிரியர் குழு-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளுறை பக்கம்


| | | |
|---|---|---|
| 01. | தோற்றத்தைக் கண்டு ஏமாறதே...<br>பேராசிரியர் ஏ.சோதி | 01 |
| 02. | கவனமாகக் கற்க<br>பேராசிரியர் ஏ.சோதி | 03 |
| 03. | மனிதநேயம்<br>முனைவர் பொற்கோ | 05 |
| 04. | குன்றா ஒழுக்கம்<br>முனைவர் பொற்கோ | 08 |
| 05. | நிலமென்னும் நல்லாள்<br>முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ.விசுவநாதம் | 11 |
| 06. | எய்தாப்பழி<br>முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ.விசுவநாதம் | 15 |
| 07. | எலியா?புலியா?<br>முனைவர் கா.பொ.இரத்தினம் | 19 |
| 08. | நான் ஆசிரியரானால்<br>புலவர் மா.பேபி சரோயா | 26 |
| 09. | பேச்சாற்றலை வளர்ப்பது எப்படி<br>கமலா கந்தசாமி | 29 |
| 10. | மகாகவி பாரதி<br>கமலா கந்தசாமி | 34 |
| 11. | நூல் பயில் இயல்புகள்<br>சுகி சிவம் | 37 |
| 12. | படிக்க வெற்றி பெற<br>சுகி சிவம் | 38 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தோற்றத்தைக் கண்டு ஏமாறாதே

-பேராசிரியர் எ.சோதி-

பிறந்ததிலிருந்து நகரத்திலேயே தங்கிப் படித்துவிட்டு வந்த மகனை வரவேற்றார். தந்தை, "எப்படிப் படிக்கிறாய்?" என்று கேட்டார். "அப்பா! பள்ளியிலேயே படிப்பில் நான்தான் முதல். விளையாட்டிலும் நிறையப் பரிசுகள் பெற்றிருக்கிறேன்" என்று பெருமையாகச் சொன்னான் அவன்.

இதைக் கேட்டு மகிழ்ச்சி அடைந்த அவர். மறுநாள் பொழுது விடிந்தது. மகனிடம் அவர் "நான் இன்று வெளியூர் செல்கிறேன். நீ நம் நிலத்திற்குச் சென்று எப்பொழுது நெல்லை அறுக்கலாம் என்று பார்த்து வா" என்றார்.

"அப்படியே செய்கிறேன்" என்ற மகன் நிலத்திற்குச் சென்றான். நெல் விளைந்திருந்த வயலை அப்பொழுதுதான் முதன் முதலாகப் பார்த்தான் அவன். சில நெற் பயிர்கள் வளைந்து தரையில் கிடந்தன. மற்றவை நிமிர்ந்து நின்று கொண்டிருந்தன.

நெல்லைப்பற்றி ஒன்றும் அறியாத அவன் வீடு திரும்பினான். வீடு திரும்பிய தந்தை, "என்ன வயலுக்குச் சென்றாயா? அறுவடையை எப்பொழுது வைத்துக் கொள்ளலாம்?" என்று கேட்டார். "அப்பா! சில பயிர்கள் தான் நல்ல வளர்ச்சி இல்லாமல் தரையில் தாழ்ந்து கிடக்கின்றன. அவற்றால் பயன் ஏதும் இல்லை. பல பயிர்கள் செழிப்பாக வளர்ந்து தலை நிமிர்ந்து நிற்கின்றன. நாளையே அறுவடையைத் தொடங்கி விடலாம்" என்றான்.

"மகனே! தரையில் தாழ்ந்து கிடப்பவை பயனற்ற பயிர்கள் அல்ல. அவைதாம் அறுவடைக்குத் தயாராக உள்ளவை. தலை நிமிர்ந்து செழித்து உள்ளன என்று சொன்னாயே அவற்றை இப்பொழுது அறுத்தால் ஒரு படி நெல்லும் கிடைக்காது. எல்லாம் பயனற்ற பதர்களாகவே இருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவையும் நன்கு முற்றித் தலை சாய்ந்த பின்னர்தான் அறுவடை செய்யலாம். நீ சொல்வதைப் பார்த்தால் அறுவடைக்கு இன்னும் ஒரு கிழமை ஆகும்" என்றார்.

"அப்பா! பள்ளியில் தெரிந்து கொள்ள முடியாத பாடத்தை இங்கு தெரிந்து கொண்டேன். பணிவு உடையவர்களே பெரியவர்கள். தலை நிமிர்ந்து நிற்கும் செருக்காளர்கள் பயனற்றவர்கள் என்பதை நெல் பயிர் உணர்த்தியுள்ளது. இதை நான் என்றும் மறவேன். பணிவுடைமையை நானும் வாழ்க்கையில் கடைப்பிடிப்பேன்"என்றார். இதைக் கேட்டு மகிழ்ந்தார் தந்தை.

நன்றி
**80 நன்னெறிக் கதைகள் நூல்**

## காலம் தவறாமை

விஞ்ஞானி சர்.சி.வி.ராமன் சொற்பொழிவாற்ற இருந்த ஒரு கூட்டத்திற்கு மைசூர் சமத்தானத்தின் மிக உயர்ந்த அதிகாரி ஒருவர் தலைமை தாங்க ஏற்பாடாகியிருந்தது. கூட்டம் ஆறு மணிக்கு தொடங்க வேண்டும். விஞ்ஞானி சர்.சி.வி.ராமன் பத்து நிமிடங்கள் முன்னதாகவே வந்து விட்டார். தலைமை தாங்க வேண்டிய அன்பர் வந்தபாடில்லை. சிறிது நேரத்தில் கடிகாரம் ஆறுமணி அடித்தது.

கூட்ட அமைப்பாளர்களுக்கு கையும் ஓடவில்லை, காலும் ஓடவில்லை! சிறிது நேரம் பொறுத்துப் பார்த்தார் சர்.சி.வி.ராமன். பிறகு எழுந்து நின்று காலியாக இருந்த தலைவர் இருக்கையை நோக்கி, "இதுவரை தரிசனம் அளிக்காத தலைவர் அவர்களே!" என்று கூறி, தமது சொற்பொழிவைத் தொடக்கி விட்டார். பல நிமிடங்கள் கடந்த பிறகு தலைவர் வந்து சேர்ந்தார். கப்சிப்பென்று தலைவர் இருக்கையில் அமர்ந்தார். தனது தவறை எண்ணி அவரது உடம்பு எல்லாம் வியர்த்துக் கொட்டியது. அதே சமயம் விஞ்ஞானி சர்.சி.வி.ராமனின் காலம் தவறாமையை எல்லோரும் போற்றிப் புகழ்ந்தார்கள்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவனமாகக் கற்க

-பேராசிரியர் எ.சோதி-

சிறுவன் மணி தன் தந்தையுடன் காட்டிற்கு மகிழ்ச்சியுடன் செல்வான். அங்கே அவன் தந்தை வெட்டப்பட்டுக்கிடக்கும் பெரிய மரங்களைத் தான் பழக்கி வைத்துள்ள யானைகளை தூக்கச் சொல்வார்.

அவர் என்ன சொல்கிறாரோ அதன்படி அந்த யானைகள் நடக்கும். தூக்கிச் செல்லும் மரங்களை எல்லாம் பக்கத்தில் உள்ள ஆற்றில் யானைகள் போடும். அந்த மரங்கள் மிதந்து கொண்டே நகரத்துக்கு வரும். அங்கிருக்கும் அவருடைய வேலையாட்கள் அந்த மரங்களைக் கரைக்குக் கொண்டு வருவார்கள்.

தந்தை எப்படி எல்லாம் யானைக்குக் கட்டளை இடுகின்றார். எந்தெந்த வேலைக்கு என்னென்ன கட்டளை என்பதைக் கவனித்து வந்தான் மணி.

நாள் தோறும் மாலையில் வீட்டிற்கு வருவார் அவன் தந்தை. ஒரு நாள் மாலை அவர் அவ்வாறு வந்து சேரவில்லை.

"மணி! உன் தந்தை ஏன் இன்னும் வர வில்லை? பார்த்து வா" என்றாள் அவன் தாய்.

உடனே அவன் காட்டை நோக்கி விரைந்தான். காட்டில் அவன் தந்தை வேலை செய்யும் இடத்தில் முனகல் ஓசை கேட்டது.

ஓசை வந்த இடத்தை அடைந்தான். அங்கே அவன் தந்தையின் கால்களின் மேல் பெரிய மரம் ஒன்று விழுந்து கிடந்தது. அவரால் கால்களை விடுவிக்க முடியவில்லை. அவனும் மரத்தை நகர்த்த முயற்சி செய்தான். அது சிறிதும் அசைந்து கொடுக்கவில்லை. அவனுக்கு யானைகளின் நினைவு வந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யானைகள் கட்டப்பட்டு உள்ள இடத்திற்குச் சென்றான். ஒரு யானையை அங்கே அழைத்து வந்தான். தன் தந்தை கட்டளையிடுவது போலவே யானையைப் பார்த்துத் தந்தையின் மேல் விழுந்திருந்த மரத்தைத் தூக்குமாறு சொன்னான்.

அந்த யானை துதிக்கையினால் அந்த மரத்தைத் தூக்கி அவரை விடுவித்தது.

விடுபட்ட தந்தை தன் கால் உடைந்ததே என்று கவலைப்பட வில்லை. தான் கற்பிக்காமலே யானை மொழியைக் கற்றுக் கொண்ட மகனின் ஆர்வத்தையும் அறிவுக் கூர்மையையும் நினைத்து மகிழ்ந்தார்.

நன்றி
**80 நன்னெறிக் கதைகள் நூல்**

## பாரதி கண்ட இரகசியம்

பிரிட்டிச் அரசின் ஒற்றன் ஒருவன் சந்நியாசி வேடத்தில் பாரதியாரின் வீட்டிற்கு வந்தான். அவன் பாரதியைக் கண்டதும் ஒரு பெரிய கும்பிடு போட்டான். வந்த ஆள் யார் என்று புரிந்து கொண்ட பாரதியார், புன்னகையுடன் அந்த சந்நியாசியைப் பார்த்து, "நீங்கள் தர்மத்தைப் புறக்கணித்து விட்டீர்கள். முதலில் வீட்டுக்குரியவர் அல்லவா சந்நியாசியைப் பணிந்து வணங்க வேண்டும்? பின்னர் சந்நியாசி தானே ஆசீர்வதிப்பார்? நீங்கள் தலைகீழாக மாற்றிவிட்டீர்களே!" என்று கூற, தன் வேடத்தின் இரகசியத்தை பாரதியார் கண்டு பிடித்து விட்டாரே என்று அந்த பிரிட்டிச் ஒற்றன் ஓடிவிட்டான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனித நேயம்

-முனைவர் பொற்கோ
(பொன் கோதண்டராமன்)-

மனித நேய உணர்ச்சி என்பது சாதி, சமயம், அரசியல், நாடு, மொழி முதலான எல்லைகளையெல்லாம் கடந்து ஒரு மனிதனின் மீது இன்னொரு மனிதனின் நெஞ்சில் இயல்பாக ஏற்படுகின்ற ஈர உணர்ச்சி. இந்த ஈரம் உலர்ந்து விட்டால் வாழ்க்கை கொடிய பாலைவனமாக மாறிவிடும்.

## அமைப்புகளும் மனிதநேயமும்

மனித நேய அடித்தளத்தில் தான் சமுதாய அமைப்புகள் யாவும் கட்டப்பட்டன. சாதி, சமயம், அரசியல் முதலான அமைப்புகள் கூட மனிதநேய உணர்வினால் கட்டப்பட்டவை தான். நாடு, அரசு ஆகியனவும் மனிதநேய அடிப்படையில் எழுந்தவை தான். மனிதநேய விரிவாக்கத்திற்கு உதவவேண்டும் என்ற நோக்கில் உருவான கருவிகள்தான் மேற்கண்ட அமைப்புகள்.

மனித உறவை மேம்படுத்தி வளர்க்கவும் மக்களை இணைக்கவும் மனித சமுதாயம் இயல்பாக வளர்த்தெடுத்த கருவிதான் மொழி.

மனித நேயக் கருவிகள் போற்றி வளர்க்கப்பட வேண்டியவை என்பதில் ஐயமில்லை. மனித நேயக்கருவிகளைப் போற்றத் தொடங்கிய மனிதன் அவற்றையே ரசிக்கத் தொடங்கி அவற்றுக்குத் தன்னை அடிமையாக்கி மனிதநேயம் என்ற குறிக்கோளையே மறக்கத் தொடங்கி விட்டால் கருவிகளை மட்டும் பாதுகாத்து என்ன பயன் விளையும்? காரியத்தை மறந்து கருவியைக் காப்பாற்றிப் பயனில்லை. எழுதத் தெரியாதவனுக்கு எழுதுகோல் பயன்படுமா? படிக்கத் தெரியாதவனுக்குப் புத்தகங்கள் பயன்படுமா? ஆற்றல் இல்லாத பேடிக்குப் படைக்கலக் கருவிகள் பயன்படுமா? மனித நேயத்தை மறந்தவனுக்குச் சாதி, சமயம், அரசியல் முதலான எந்த அமைப்புமே பயன்படாது என்பதுதான் உண்மை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாதியின் பெயரைப் பயன்படுத்தித் தன்னை மட்டுமே வளர்த்துக் கொள்பவனை அந்தச் சாதியே ஒருநாள் புறக்கணிக்கும். சமயத்தின் பெயரைப் பயன்படுத்தித் தன்னை மட்டுமே வளர்த்துக்கொள்பவனை அந்தச் சமயமே ஒருநாள் புறக்கணிக்கும்.மனிதநேயத்தை மறந்து சுயநேயத்திலேயே முழுகிக் கிடக்கும் மனிதப் போலிகள் எல்லா அமைப்புகளுக்குமே எதிரிகள். அவர்களால் அமைப்புகளைச் சிதைக்கத்தான் முடியும், உருவாக்க முடியாது.

அமைப்புகள் அனைத்தும் ஒரு காரியத்துக்காக உருவாக்கப்பட்ட கருவிகள். சுயநலவாதிகள் மனித நேயத்தை மறந்து விட்டு, மனிதகுல வரலாற்றில், சிறந்தஅமைப்புகளை எல்லாம் சீரழித்திருக்கிறார்கள். மனிதநேயத்தை மறந்த சுயநேயவாதிகள் சமுதாய அமைப்புகளை எல்லாம் தங்கள் சுயநன்மைக்குப் பயன்படுத்திய போதுதான் பேரும் பூசலும் எழுந்தன. திரிபு வாதங்களும் மோசடிகளும் சூழ்ச்சிகளும் முளைத்தன. தீமைகள் தீமைகளைப் பெருக்கின.

மனிதநேய விளக்கு சரியாக ஒளிபரப்பினால் அந்த வெளிச்சத்தில் கரப்பான் பூச்சிகள் நடமாட முடியாது.

## மனிதநேயக்கடைப்பிடி

மனிதநேயத்தைக் கடைப்பிடியிலிருந்து வழுவாமல் இயங்கினால் எத்துணை அமைப்புகள் இருந்தாலும் அது மனித மேம்பாட்டிற்கு தடையாகாது. மனிதநேயக் கடைப்பிடியிலிருந்து வழுவி விட்டால் எந்த அமைப்பும் மனிதமேம்பாட்டுக்குப் பயன்படாது. மனிதநேயம் என்பது இயல்பான உணர்ச்சி. அதற்கு இடையூறு செய்யாமலிருந்தாலே போதும். அது தானே வளரும்.

## புரிந்துணர்வும் ஒப்புரவும்

ஒத்துணர்வோடு ஒருவரையொருவர் புரிந்துகொள்ளும்போது ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுப்பதும் உதவி செய்வதும் இயல்பாக நடக்கும். இப்படி விட்டுக்கொடுப்பதையும் உதவி செய்வதையுந்தான் ஒப்புரவு என்று சொல்கிறோம். இப்படிப்பட்ட ஒப்புரவுதான் படிப்படியாக உலகளாவிய மனிதநேயத்தை உருவாக்கும். ஒப்புரவால் தனிமனிதன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருவனுக்குக் கேடுவந்தாலும் அது மகிழ்ச்சியோடு ஏற்றுக்கொள்ளத் தக்கது என்கிறார் திருவள்ளுவர்.

ஒருவரையொருவர் சரியாக புரிந்துகொண்டால் பகைமைத்தீ தானாகவே தணிந்து அணைந்து விடும். பகைமைத்தீ அணைந்து விட்டால் விட்டுக்கொடுத்து உதவிபுரியும் ஒப்புரவு உணர்ச்சி இயல்பாக அரும்பி வளரும். புரிந்துணர்வை வளர்த்துக் கொள்வது ஒரு கலை. இந்தக் கலையை நாம் முயன்றுதான் வளர்த்துக்கொள்ள வேண்டும். புரிந்துணர்வு வளர வளர ஒப்புரவு வளரும். ஒப்புரவு உலகளாவிய மனிதநேயத்தை உருவாக்க உதவும். மனிதநேயக் கடைப் பிடியிலிருந்து வழுவாமல் இயங்கினால் எத்துணை அமைப்புகள் இருந்தாலும் இசைந்து இயங்கலாம்.

'ஒத்த தறிவான் உயிர்வாழ்வான் மற்றையான்
செத்தாருள் வைக்கப் படும்.' (திருக்குறள்)

நன்றி
**இலக்கிய வெளிச்சம் நூல்**

**சோக்கிரட்டீசு சொன்ன தத்துவம்**

கிரேக்கத் தத்துவமேதை சோக்கிரட்டீசு ஒரு சமயம் தான் குடியிருப்பதற்காக சிறிய வீடு ஒன்றைக் கட்டத் தொடங்கினார். அப்போது ஒருவர் வந்தார். அவர் சோக்கிரட்டீசிடம், "ஐயா! உலகப் புகழ் பெற்ற தத்துவஞானி நீங்கள், போயும், போயும் இவ்வளவு சிறிய வீடு கட்டுகிறீர்களே, இது போதுமா?" என்று கேட்டார். அதற்கு சாக்கிரட்டீசு , "இந்த சிறிய வீட்டை நிரப்புவதற்கே உண்மையான நண்பர்கள் கிடைப்பார்களா என்பது எனக்கு சந்தேகமாக இருக்கிறது!" என்றார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குன்றா ஒழுக்கம்

-முனைவர் பொற்கோ
(பொன் கோதண்டராமன்)-

நாம் பிறர்மீது கொண்டிருக்கின்ற அன்பும் அக்கறையும் செயலாக வெளிப்படும் போதுதான் பிறர்க்காக நம்மிடமுள்ள அன்பைப் பற்றியும் அக்கறையைப்பற்றியும் நமக்கே புரியும். இது ஒரு புறம் இருக்க, நம்மிடம் மிகுந்த அன்பை உடையவர் போல நன்கு திட்டமிட்டு நடித்துத் தாம் கருதிய காரியங்களைச் சாதித்துக் கொண்டு அதன் பிறகு நம்மோடு யாதொரு தொடர்பும் இல்லாதவர் போல வெகுதூரம் விலகி விடுகிற தன் காரியப் புலிகளையும் நாம் பல்வேறு சமயங்களில் சந்தித்திருப்போம்.

உள்ளத்தில் உள்ள அன்பும் அக்கறையும் செயலாக வெளிப்படும் போதுதான் அவற்றின் உண்மை நிலை விளங்குகிறது. அப்படி வெளிப்படும் செயல்களிலும் கூட உண்மையும் போலியும் இருக்கும். இதைப் போலவே ஒருவரையொருவர் மதிக்கும் மரியாதை உணர்விலும் உண்மையும் உண்டு, போலியும் உண்டு.

உள்ளத்தில் உள்ள மரியாதை உணர்வு செயலாக வெளிப்படும் போதுதான் நாம் மற்றவர்களை மதிக்கிறோம் என்பதை அவர்கள் உணர்ந்து கொள்ள முடியும். இந்த மரியாதை உணர்வு நல்ல குடும்பத்தில் பிறந்து வளர்ந்தவர்களிடம் இயல்பாகவே அமைந்துள்ள ஒரு பண்பு. இந்தப் பண்பு பதவிக்கும், பணத்துக்கும் ஏற்றபடி வளைந்து நெளிந்து கண்டபடி மாறுவதில்லை.

நம்மிடம் ஒருவர் மரியாதை காட்டும் போது அவரிடம் நமக்கு ஒரு பிடிப்பும் ஈடுபாடும் வளர்வதை நாம் அனுபவித்திருப்போம். அப்படி மரியாதை காட்டுவது ஒருவருடைய வளர்ப்புச் சூழலால் ஏற்பட்ட உயர்ந்த பண்பாகவும் இருக்கலாம். அல்லது நம் மனதில் ஈடுபாட்டை ஏற்படுத்தித் தாம் கருதிய காரியங்களைச் சாதித்துக் கொள்ள ஒருவர் கையாளும் தந்திரமாகவும் இருக்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரியாதை உணர்வு என்பது வளர்ப்புச் சூழலால் ஏற்பட்ட பண்பாக இருந்தால் அது பதவியையும், பணத்தையும் கண்டு வளைந்து நெளிந்து கண்டபடியெல்லாம் மாறாது. இந்தப்பண்பு குடிப்பிறப்பிற்கு உரிய பல சிறந்த பண்புகளில் ஒன்றாகப் போற்றப்படுகிறது.

மதிக்கத்தக்க பெரியோர்களையும், நண்பர்களையும் கண்டவுடன் இருக்கையிலிருந்து எழுவதும், எதிரே சென்று வணங்கி அழைத்து வருவதும், பிரியும் போது "நீங்கள் இருங்கள், நான் போய் வருகிறேன்" என்று அவர்கள் விடை தந்த பின் பிரிவதும் ஆகிய இவை போன்ற செயல்கள் ஒருவர் தம் உள்ளத்தில் கொண்டுள்ள மரியாதை உணர்வை வெளிப்படுத்தும் செயல்கள். மரியாதை உணர்வு இல்லாமலே கூட ஒருவன் இந்தச் செயல்களையெல்லாம் செய்யலாம். அப்படிப் போலியாக இந்தச் செயல்களைச் செய்வது குடிப் பிறப்பாளர்களால் இயலாத காரியம். கயவர்களுக்கோ அது கைவந்த கலை. மரியாதைக்கு உரிய இந்தச் செயல்கள் உண்மையா போலியா என்று எப்படிப்பாகு படுத்துவது? இவை உண்மையா போலியா என்று உள்ளத்தால் உணரத்தான் இயலுமே தவிர அந்தச் செயல்கள் தோன்றிய நேரத்தில் அவற்றை அறிவின் துணை கொண்டு காரண காரியப் போக்கில் அவ்வளவு எளிதில் விளக்க முடியாது.

இருக்கை எழலும், எதிர் செலவும், விடுப்ப ஒழிதலும் என மேற்கூறிய மரியாதைக்கு உரிய செயல்ளை குடிப்பிறந்தார் ஒரு சிறந்த ஒழுக்கமாகக் கொண்டு ஒழுகுவர். கயவர்களும் அந்தச் செயல்களைச் செய்வது உண்டு. குடிப்பிறந்தாரின் மரியாதைச் செயல்களும் கயவர்களின் மரியாதைச் செயல்களும் செயலளவில் ஒன்று போல் தோன்றினாலும் அவை ஒரு தன்மையனவாகக் கருதத் தக்கனவல்ல, வேறுபடுத்தி உணர வேண்டிய செயல்களே.

ஒருவருக்கொருவர் மரியாதை காட்டி வணக்கமாக நடந்து கொள்ளுவதும் ஒருவர் உணர்வை ஒருவர் நன்கு மதித்து இணக்கமாக நடந்து கொள்வதும் சமுதாய வாழ்வுக்கு மிக மிக இன்றியமையாத இயல்புகள். இந்த இயல்புகளைச் சிறந்த குடும்பத்தில் பிறந்தவர்கள் வழி வழியாகப் போற்றிக் காத்து வளர்த்து வருகிறார்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்துணை விளக்கங்கட்கும் இடந்தரும் வகையில் கருத்துப் பிழம்பாய்த் திகழும் நாலடியாரைப் பாருங்கள்.

'இருக்கை எழலும் எதிர் செலவும் ஏனை
விடுப்ப ஒழிதலோ டின்ன – குடிப்பிறந்தார்
குன்றா ஒழுக்கமாக் கொண்டார் கயவரோ(டு)
ஒன்றா உணரற்பாற் றன்று' (நாலடியார்)

நன்றி
இலக்கிய வெளிச்சம் நூல்

**எடிசனை உருவாக்கிய தாய்!**

தோமச் அல்வா எடிசனை அவரது பள்ளி ஆசிரியர், எதற்கும் தகுதியற்றவர் என்று கூறிவிட்டார். மருத்துவர்கள் எடிசனை சோதனை செய்து விட்டு, "எடிசனின் தலை அமைப்பு இயற்கைக்கு விரோதமாக அமைந்திருக்கிறது. எனவே, இவர் விரைவில் பைத்தியமாகி விடுவார்!" என்று கூறினார்கள்.

ஆனால் எடிசனின் தாயாரோ, எடிசனை பெரிய ஆளாக்குவேன்!" என்னும் உறுதியோடு அவருக்குப் பாடம் கற்பித்தாள். அந்தத் தாயாரின் விடாமுயற்சியாலும், உழைப்பாலும் எடிசன் உயர்வு பெற்றார். "மனிதன் கடன்பட்டிருப்பது மூளைக்கல்ல! முயற்சிக்கே! கடவுள் வரங்களை விற்பனை செய்கின்றார். மனிதர்களின் முயற்சியே அவற்றின் விலை!" என்னும் அற்புத உண்மையை எடிசன் பிற்காலத்தில் அறிவித்தார். அவர் கூறியபடியே அவர் வாழ்க்கையும் அமைந்து வெற்றி கண்டது.

ஒரு சமயம் எடிசன், "என் அகவையை நான் ஆண்டுகளைக் கொண்டு அளவிட விரும்பவில்லை. நான் செய்து முடித்து வெற்றி கண்ட செயல்களைக் கொண்டே கணக்கிடுகிறேன். அகவையின் முதிர்ச்சியால் நான் ஓய்ந்து சும்மா இருக்கும் காலத்தை எதிர்பார்க்க வில்லை. வேலை நிறைந்த வாழ்க்கையே நல்வாழ்க்கை என்று நான் நினைக்கிறேன்!" எனக் கூறினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிலமென்னும் நல்லாள்

-முத்தமிழ் காவலர்
கி. ஆ. பெ. விசுவநாதம்-

'இலமென் றசைஇ இருப்பாரைக் காணின்
நிலமென்னும் நல்லாள் நகும்'

என்பது திருக்குறளில் ஒரு குறள். இது "உழவு" என்னும் தலைப்பில் உள்ளது.

பண்புடைமையை, நாணுடைமையை, குடிப் பெருமையைக் கூறிய பின்னும், வறுமையை, இரவை, இரவச்சத்தைக் கூறுவதன் முன்னும், உழவைப்பற்றிக் கூறியிருப்பது நயமுடையதாகக் காணப்படுகின்றது.

உழவுத்தொழில் சிறப்புடையது! உலகம் உழவர் பின்னே செல்லக் கூடியது! உழுவார் உலகுக்கு அச்சாணி! உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்! உழவர் கைம்மடக்கின் உலகில் வாழ்வில்லை என்றெல்லாம் கூறியபின், இறுதியாகக் கூறிய குறள் இது.

உழவுத் தொழில் சிறந்திருந்தும், அதனைச் செய்யாது சோம்பித் திரியும் மக்களின் இழிநிலையை இக் குறள் அருகாமையாக விளக்கிக் கொண்டிருக்கிறது.

எம்மிடம் எப்பொருளுமில்லை என்று கூறிச் சோம்பலும் வறுமையும் கொண்டு வாடியிருக்கும் மக்களைக் கண்டு நிலம் நகைக்கும் என்பது இதன் பொருள்.

எமக்கு எத்தொழிலுமில்லையே என்று ஏங்கித் திரியும் வேலையில்லாத் திண்டாட்டக்காரர்களைக் கண்டும் நிலம் நகும் என்பதும் இக்குறளின் கருத்தாகும்.

இப் பரந்த உலகில் நிலங்கள் பலவிருந்தும், அதனைத் திருத்தி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உழுது, விளைத்து உண்டு வாழாது, வீணாக வறுமையால் வாடி வருந்தி வாழ்கின்ற மக்களைக் கண்டால் நிலம் நகைக்கும் என்று குறள் கொட்டி முழக்குகின்றது.

"இலன்" என்று ஒருமையிற் கூறாமல், "இலம்" என்று பன்மையிற் கூறியிருப்பதிலிருந்து, எங்கேனும் ஓரிருவர் காணப்பட்டாலும், சோம்பேறிகளைப் பெருந்தொகையினராகக் காணமுடியாது என்ற கருத்தும் இதில் வலியுறுத்தப் பட்டிருப்பதாகத் தெரிகின்றது.

"நகும்" என்ற சொல்லினைக்கொண்டு அதை மகிழ்ச்சிச் சிரிப்பு எனக் கொள்வதில்லை. அது ஒரு ஏளனச்சிரிப்பு நிலமென்னும் நல்லாள். என்பதனை இக் குறள் வெளிப்படையாகக் காட்டிக்கொண்டிருக்கிறது. உழுது உண்டு வாழ நிலங்கள் இருக்கின்ற பொழுது ஒருவன் தனக்குப் பொருளில்லை என்றாவது, வேலையில்லை என்றாவது கூறிக்கொண்டு வறுமை வாழ்வு வாழ்வது இழிவு, அது ஏளனத்திற்குரியது என்பது இக் குறளின் முடிவு.

அத்தகைய இழிந்த வாழ்வு வாழும் மக்களைக் கண்டு, நல்வாழ்வு வாழும் மக்கள் நகைப்பார்கள் என்று கூறினால் நம்மக்கட்குப் பழி வந்து விடக் கூடும். ஆதலின் அதை விடுவித்து இறுதியாக அந்த நிலமே நகைக்கும் எனக் கூறியிருக்க வேண்டுமெனத் தோன்றுகிறது. "நிலம் நகும்" என்பதிலும் கூட நிலத்தை ஒரு பெண்ணாக உவமித்து, நிலப்பெண் சிரிப்பாள் என்று கூறி வள்ளுவரும் அந்த நகைப்பில் பங்கு பெற்று நகைப்பது நமக்கும் கூட நகைப்பை உண்டாக்கிவிடுகிறது.

ஆண்மகனுக்குத் தன்மான உணர்ச்சியையூட்டும் ஒரு வழி உன் செயலைக் கண்டு சிரிப்பாள் என்பது தான் என்பதை வள்ளுவர் அக்காலத்திலேயே அறிந்து இக் குறளில் புகுத்தியிருப்பது நமக்குப் பெருவியப்பை அளிக்கிறது.

பெண் மக்களிலும் கூடக் கெட்ட பெண்கள் அல்லாத நல்ல பெண்களே எள்ளி நகையாடுவர் என்பதை "நல்லாள் நகும்" என்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொற்கள் நமக்கு அறிவித்துக் கொண்டிருக்கின்றன.

"நல்லாள்" என்ற சொல்லுக்கு நலமுடையவள், அழகுடையவள், ஒழுக்கமுடையவள் என்பதோடு, இல்லாள் என்றும் பொருள் கொள்ளலாம். இக்குறளுக்கு முன்னுள்ள குறளில், இல்லாளின் ஊடிவிடும் என்றார். இக்குறளில் இல்லாள் நகைத்துவிடுவாள் என்றும் கூறுகிறார்.

தன்னைத் தழுவி மகிழ்வித்து மகிழ்ந்து வாழவிரும்பாத கணவனைக் கண்டு இல்லாள் வெம்பி உளம் புழுங்கித் குறு நகை கொள்வது போல், நிலமும், தன்னைத் தழுவி உழுது விளைவித்து உண்டு வாழ விரும்பாத ஆண்மகனைக் கண்டு நகையாடும் என்பது பொருளமைதியுள்ள ஓர் உயர்ந்த எடுத்துக்காட்டு ஆகும்.

"நகும்" என்பதோடு வள்ளுவர் விட்டுவிட்டதிலிருந்து, தன்னைப் பயன்படுத்திக்கொள்ளத் தெரியாத ஆண் மகனைக் கண்டு நிலம் நகைப்பதோடு விட்டு விடும் என்பதும், அவ்வாறே தன்னைப் பயன்படுத்திக்கொள்ள முடியாத கணவனைக் கண்ட நல்லாளும் நகைப்பதோடு விட்டு விடுவாள் என்பதும் பெறப்படும். இது பெண்மக்களின் தரத்தையே உயர்த்திக் காட்டுவதாக இருக்கிறது. "காணின் நகும்" என்ற சொற்றொடர் கடுங்காட்டு நிலத்தையோ, கணவனற்ற மனைவியோ சுட்டிக்காட்டாமல் எதிரில் எளிதில் இருப்பவகளையே சுட்டிக்காட்டி, அவைகளைப் பயன்படுத்திக் கொள்ளத் தெரியாத மக்களைக் கண்டு நகைப்பதைப் புலப்படுத்துவது நமக்குப் பெருமகிழ்ச்சியை அளிக்கிறது.

நிலமகளையும் குலமகளையும் இன்பப் பொருளாக்கி ஆண்மகனை இன்பம் துய்ப்பவனாக இக் குறளில் உவமித்திருப்பது வள்ளுவரின் பேரறிவை விளக்குவதாக அமைந்திருக்கிறது.

நல்லாளும் நன்னிலமும் இருந்தும் நல்வாழ்வு வாழாத நாணிலியைக் கண்டு மனைவி சிரிப்பாள். நிலம் சிரிக்கும் என்பது மட்டுமல்ல: இந்த மாநிலமே சிரிக்கும் என்ற கருத்தும் இக் குறளில் அடங்கியே இருக்கிறது. இதனை நிலம் நகும் என்பதாலறியலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பருவ மங்கையர் பலரிருக்கும் ஊரில், விரும்பும் ஒரு வரை மணந்து இல்வாழ்வு வாழ வேண்டும் என்ற மனக்கவலையோ மணக்கவலையோ இன்றி வீணில் திரிந்து வெறு வாழ்வு வாழ்கின்ற இளைஞர்கள் சிலரைக் கண்டால் அந் நல்லாள்கள் இவ்வாறே நகைப்பர் என்ற கருத்தும் இக் குறளில் இல்லாமலில்லை!

பெண் மக்களின் நல்வாழ்வுக்கு, ஆண்மக்கள் எவ்வளவு இன்றியமையாதவர்களோ, அந்த அளவிற்கு நிலங்களின் செழிப்பிற்கும், ஆண்மையுள்ள மக்கள் இன்றியமையாதவர்கள் எனபது இக்குறளால் பெறப்படும் உண்மையாகும்.

இருப்பாரை என்ற சொல்லுக்கு மாறாக, "இரப்பாரை" என்ற சொல் அமைந்திருக்க வேண்டும் எனக் கருதுபவரும் உண்டு. அவ்வாறாயின், உழைத்து உண்டு வாழ நிலமிருந்தும் இரந்து உண்டு வாழ விரும்புவது இழிந்த செயல் என்பது பொருளாகும்.

நிலமென்னும் நல்லாள் முயற்சியுடைய ஆண்மகனுக்குச் செல்வமனைத்தும் வழங்குவாள். நல்லாளாகிய இல்லாள் அன்புடைய கணவனுக்கு அனைத்தையும் வழங்குவாள் என்பது இக் குறளின் திரண்ட கருத்தாகும்.

2000 ஆண்டுகளுக்கு முன் தோன்றிய வள்ளுவர் பெருமான் வாக்கிலிருந்து இன்றைய வேலையில்லாத் திண்டாட்டத்தை ஒழிக்கவும், தொழிலாதார அறிவை வளர்க்கவும், பொருளாதார நிலையை உயர்த்தவும் தோன்றிய இக் குறளை இன்னும் ஒருமுறை படிக்கிறீர்களா? படியுங்கள்.

**'இலமென் றசைஇ இருப்பாரைக் காணின்**
**நிலமென்னும் நல்லாள் நகும்'**

நகைத்து விட்டுவிடும் இக் குறளைப்போல நீங்களும் இதனைப் படித்து விட்டுவிடாமல் பயன்படுத்திக் கொள்வது நல்லது.

**வாழட்டும் தமிழகம்! வளரட்டும் உழவுத் தொழில்!!**

நன்றி
**திருக்குறள் புதைபொருள் நூல்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எய்தாப் பழி

-முத்தமிழ் காவலர்
கி. ஆ. பெ. விசுவநாதம்-

'ஒழுக்கத்தின் எய்துவர் மேன்மை இழுக்கத்தின்
எய்துவர் எய்தாப் பழி'

என்பது திருக்குறளின் ஒரு குறள். இது "ஒழுக்க முடைமை" என்ற தலைப்பில் வந்த ஒன்று.

ஒழுக்கத்தை அடைந்தவர் உயர்வையும், இழுக்கத்தை அடைந்தவர் பழியையும் அடைவர் என்பது இதன் பொருள். ஒழுக்கமுடையவர் உயர்ந்தோராகவும், அதனை இழந்தவர் தாழ்ந்தோராகவும் கருதப்பெறுவர் என்பது குறிப்பு.

ஒழுக்கத்தை நல்லொழுக்கம் எனவும், தீயொழுக்கம் எனவும் குறிப்பிடுவதுண்டு. எனினும்,"ஒழுக்கம்" என்பது நல்லொழுக்கத்தை மட்டுமே குறிக்கும் என்பது இக் குறளின் முடிவு.

"மக்களாய்ப் பிறந்தவர்கள் உயர்வை அடைய வேண்டும். அதற்குரிய ஒரே வழி ஒழுக்கத்தைப் பெறுவது தான் என்பது இக்குறளின் மேற்பாதியின் கருத்து.

"ஒழுக்கத்தின் எய்துவர் மேன்மை" என்பதனால் அது இல்லாத கல்வி, கேள்வி, ஆடை, அணி, பட்டம், பதவி, வீடு, நிலம், வண்டி, வாகனம், பொன், பொருள் முதலியவைகளால் மேன்மையடைய முடியாது என இக் குறள் வெளிப்படையாகவே கூறிக் கொண்டிருக்கின்றது. இதனால், பிற பலவற்றால் அடைய முடியாத உயர்வை ஒழுக்கம் ஒன்றினாலேயே அடையலாம் என்பதும் பெறப்படும்.

முதலில் ஒழுக்கத்தைப் பெற்று அதன் மூலம் உயர்வடைந்து விட்ட ஒருவர் பின்பு அறியாது ஒரு தவறு செய்து விட்டாலும்,அல்லது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர் தவறு செய்து விட்டதாக ஒருவர் முன் வந்து கூறினாலும் உலகம் நம்பாது ஆதலின் ஒழுக்கத்தைப் பெற்றவர் எப்பொழுதும் அடைவது மேன்மையே என இக்குறள் கூறிக்கொண்டிருக்கின்றது இதனை "ஒழுக்கத்தின் எய்துவர் மேன்மை" என்பதால் நன்கறியலாம்.

மக்கட் பண்பு ஒழுக்கத்தை அடைவதே. அதனையடையாதவர் மக்களல்லர் "அவர் மரம்" என்பது வள்ளுவர் கருத்து. இதனை "மரம் போல்வர் மக்கட் பண்பில்லாதவர்" என்ற மற்றொரு குறளாற் காட்டுகிறார். இவ் உவமையும் மக்களில் தாழ்ந்தோரைக் குறிப்பிடுவதில்லை. ஏனெனில் மரம் இருந்தும் உதவுகிறது. இறந்தும் உதவுகிறது.

இக் குறளின் மேற்பகுதிக்கும், கீழ்ப்பகுதிக்கும் இடையில் "இழுக்கம்" என்ற சொல் காணப்படுகின்றது. "ஒழுக்கம்" என்பதன் நேர்மாறானதே "இழுக்கம்" என்றாகும். ஒழுக்கம் என்பது நல்லொழுக்கத்தை மட்டுங் குறிப்பது போல இழுக்கம் என்பது தீயொழுக்கத்தை மட்டுமே குறிக்கும்.

"இழுக்கு" என்ற சொல் திருக்குறளில் 18 இடங்களில் காணப்படுகிறது. அவற்றுள் தவறு என்ற பொருளில் வந்தவை 6, (136,137,35,48,385,536) குற்றம் என்ற பொருளில் வந்தவை 5, (127, 164, 467, 716, 893) வழுக்கல் என்ற பொருளில் வந்தவை 3, (384, 415, 963) பிழை என்ற பொருளில் வந்தவை 2, 138, 808) அன்னாமை என்ற பொருளில் வந்தது 1, (535) இக்குறளில் இது "முதல் வரிசையிலுள்ள தவறு" என்ற பொருளில் வந்துள்ளது.

"இழுக்கத்தின் எய்துவர் எய்தாப் பழி" என்ற இக் குறளின் கீழ்ப்பகுதி, ஒழுக்கத்தில் தவறிய மக்கள் பழியை அடைய நேரிடும் என எச்சரித்துக் கொண்டிருக்கிறது.

பழியிலும் கடும்பழி, கொடும்பழி, பெரும்பழி எனப் பல்வகையுண்டு. இக்குறள் அவைகளுக்குமேலாக "எய்தாப்பழி" என ஒரு புதுப்பழியையும் காட்டுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒழுக்கம் தவறிய ஒருவனை சுட்டிக்காட்டி, இவரிடம் நான் நேற்றிரவு நூறு ரூபாய்களைக் கொடுத்து வைத்துத் திண்ணையிற் படுத்திருந்தேன். காலையில் கேட்டால் தரமறுக்கிறார். என ஒருவன் பொய்யாகக் கூறினாலும், உலகம் எளிதாக நம்பி விடுமாம். பணத்தை அவனிடம் கொடுத்து விடும்படி ஊரார் வற்புறுத்துவார்களாம். அவன் எவ்வளவுதான் உண்மையைச் சொன்னாலும் ஊரார் நம்பவே மாட்டார்களாம். ஆகவே, அவன் ஏற்காத பழியையும் ஏற்க நேரிட்டுவிடுமாம். இக்கருத்துக்கள் ஒவ்வொன்றையும் ஒவ்வொரு அம்புகளாக்கி, "எய்தாப்பழி" என்பது நம் உள்ளத்தில் எய்துகொண்டேயிருக்கிறது.

சாலை அமைத்தல், சத்திரங்கள் கட்டுதல், சோறு வழங்குதல், கோயிலைப் புதுப்பித்தல், பள்ளியைத் தொடங்குதல் முதலியவை நல்லோர் செய்யும் நற்பணிகள் இவை அனைத்தும் புகழுக்குரியவை. என்னும் ஒழுக்கத்தை இழந்து விட்ட ஒருவன் இவற்றிலொன்றைச் செய்வானானால், அதற்குரிய புகழையும் அவனால் அடையமுடியாது. "செய்த இழிசெயல்களை மறைப்பதற்காகவே அவன் இதைச் செய்கிறான். என மேலும் அவன் பழிக்கப்படுவான். பாவம்! அவன் அடைய வேண்டாத பழி இது என் செய்வது? "எய்தாப்பழி என்பது, நமக்கு இதை மட்டுமா அறிவிக்கிறது? இன்னும் என்னென்னவோ?

மேற்பாதியை மேன் மக்களிற்கும், கீழ்ப்பாதியை கீழ் மக்களிற்கும் அமைப்பதை வள்ளுவர் ஒரு கொள்கையாகக் கொண்டிருக்கிறார் என்றே தெரிகிறது. இவ் எய்தாப்பழி. உண்மை பல்வேறு குறள்களால் நன்கறியலாம். அது மட்டுமல்ல இந்த அதிகாரத்திலேயே வந்துள்ள, "வழுக்கியும் வாயால் சொல்லல் தீது", "ஒழுக்கமிலான் கண் உயர்வில்லை", "பிறப்பொழுக்கம் குன்றக் கெடும்", "இழிந்த பிறப்பாய் விடும்", "என்றும் இடும்பை தரும்" என்ற கீழ்ப்பாதி குறள்களும் இதனை மெய்ப்பிக்கும்.

"எய்தாப்பழி" ஆம், இக்குறளின் இறுதிச்சீர்! இறுதி எச்சரிக்கை! எண்ணாப்பழி, செய்யாப்பழி, பொல்லாப்பழி எனவும் கூறலாம். ஒழுக்கம் தவறி நடக்கும் மக்களுக்கு இதை ஒரு "அபாய அறிவிப்பு" என்றே கூறியாக வேண்டும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தம்பி! ஒழுக்கமாக நட! அதனால் பயனுண்டு, புகழுமுண்டு! ஒருக்கால் நீ அறியாது தவறினாலும், உலகம் நம்பாது. ஆதலின் அன்றும் உனக்கு உய்வுண்டு! ஆகவே முயற்சி செய்து அதனை அடை! முடியாவிடில் சும்மாவாவது இருந்துவிடு! தவறியும் இழுக்கத்தில் இறங்கி விடாதே! அதனால் நீ பழியையே அடைவாய். பின் நல்லது செய்யினும் பயனுமிராது, புகழும் வராது, பழியும் நீங்காது.

அந்த அளவில் நின்றுவிட நீ விரும்பினாலும் உலகம் உன்னை ஒரு போதும் விட்டுவிடாது. இறுதியில் ஏற்காத பழியும் நீ ஏற்கவேண்டி வந்துவிடும்! என எச்சரிக்கை செய்து கொண்டிருக்கிறது இக்குறள், குறள் வேண்டுமா? படியுங்கள் மறுபடியும்.

ஒழுக்கத்தின் எய்துவர் மேன்மை இழுக்கத்தின்
எய்துவர் எய்தாப் பழி.

படித்தீர்களா? மறந்து விடாதீர்கள், ஏனெனில் குறள் படிப்பதற்கோ, மறப்பதற்கோ தோன்றியதல்ல, அது நடப்பதற்காகவே தோன்றிய ஒன்று!

**வாழட்டும் தமிழகம்! வளரட்டும் தமிழ்ப் பண்பு!!**

நன்றி
**திருக்குறள் புதைபொருள் நூல்**

## தாய் மொழிப் பற்று

பாரதியின் தம்பி விசுவநாத ஐயர் திருச்சியில் படித்துக் கொண்டிருந்தபோது, சென்னையில் இருந்த தன் அண்ணன் மகாகவி பாரதிக்கு ஆங்கிலத்தில் ஒரு கடிதம் எழுதி இருந்தார். அதைப்படித்துப் பார்த்த பாரதியார், தன் தம்பிக்கு இப்படிக் கடிதம் எழுதியிருந்தார்: "அன்பான தம்பியே, இனி இவ்வாறு கடிதம் எழுதாதே! தமிழிலேயே எழுது! கொச்சையாக இருந்தாலும் பரவாயில்லை!"


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எலியா? புலியா?

முனைவர் கா.பொ இரத்தினம்

அன்புநிறைந்த மாணவர்களே! நீங்கள் எலிகளா? புலிகளா? என்று உங்களைக்கேட்கிறேன். இப்பொழுது நீங்கள் விடைகூற வேண்டியதில்லை எனது உரையின் முடிவில் நீங்களே கணித்துக் கொள்ளலாம். உங்கள் நண்பர்கள், பெற்றோர், உற்றார் முதலானவர்களையும் அவர்கள் எலிகளா? புலிகளா? என்று நீங்கள் மதிப்பிட்டுக் கொள்ளலாம்.

உழவர்கள் பாடுபட்டுப் பயிரிடுகிறார்கள், நெல் விளைகிறது, பதமாக விளைந்தவுடன் எலி நெற் கதிர்களை அறுத்துக் கொண்டு போய்த் தன் வளையை நிரப்புகிறது. அதை அரண் செய்து காப்பாற்றுகிறது. இந்த எலியினுடைய முயற்சியைப் போலப் பிறருடைய உழைப்பிலே வாழுகின்றவர்கள் பலர் இந்த உலகிலே இருக்கிறார்கள். இவர்கள் தம்முடைய முயற்சியால் வாழாமற் பிறரை சூறையாடும் நயவஞ்சகர்கள், தாம் எளிதிற் பெற்ற பொருளைக் கூடப் பிறருடன் கலந்துண்ணாமல் பதுக்கி வைக்கும் தன்னலக்காரர்கள். சமுதாயத்தின் புல்லுருவிகள். இவர்களுடைய உள்ளம் எலியுள்ளம். இவர்களால் சமுதாய வாழ்வு சீரழிந்து விடும்.

பசியால் வருந்திய புலி ஒரு பன்றியைக் கொல்கிறது. பன்றி புலியின் இடப்பக்கத்தில் விழுந்து இறக்கிறது. புலி மானமுள்ள மிருகம். "புலி பசித்தாலும் புல் தின்னாது" என்பது பழமொழி. இடப்பக்கத்தில் விழுந்ததை உண்பது புலியின் மானத்துக்கு இழுக்கு. ஈகையால் அப்புலி அதை உண்ணவில்லை. அன்று முழுநாளும் அப்புலி பசியுடன் கிடந்தது. அடுத்தநாள் அது மிகுந்த வீறுடன் வெளிக்கிளம்பி ஒரு யானையை வலப்பக்கத்தில் விழுத்தியது. இந்தப் புலியைப் போல மானத்தை விடாது மக்கள் வாழ்தல் வேண்டும். முறை தவறிப் பொருளையீட்டுதல் கூடாது. வயிற்றுப் பிழைப்புக்கு, சிறு உத்தியோகத்திற்கு மானத்தையிழந்து அடிமைப்படல் கூடாது. முயற்சி முதலிலே நற்பயனை அளிக்காவிடினும் சோர்வடையாமல் மேலும் மேலும் முயலுதல் வேண்டும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்னம்பிக்கை, தன்மானம் முதலியன உடையவர்களாக இருத்தல் வேண்டும். இத்தகையவர்களே உழைப்பாளிகள், உத்தமர்கள். தம் இனத்தை, தம் நாட்டை, தம் மொழியை வாழவைக்கும் புதுமைச் சிற்பிகள்.

இவர்கள் உரமான உள்ளம் உடையவர்கள். பசித்த புலியின் உள்ளம் உடையவர்கள். தம்பசியைத்தீர்க்க மக்கள் முயலும் போது பசி தீர்க்க எலி செய்யும் இழிந்த முயற்சியினை பின்பற்றாமல் புலி செய்யும் பெரு முயற்சியில் - மானத்தைக்காக்குஞ்செயலில் ஈடுபடுதல் வேண்டும்.

நம்மினம் இன்று இடர்ப்படுவதற்குக் காரணம் நம் மக்களிடையே பல எலிகள் - கள்ள எலிகள் - மானங்கெட்ட எலிகள் இருப்பதேயாகும். இளைஞர்களாகுதல் இனிப் புலிகளாக - மானவீரர்களாக - உருப்பட்டாற்றான் எம்மினம் தலையெடுக்கும், நல் வாழ்வு பெறும். ஆகவே நீங்கள் யாவரும் புலிக்குட்டிகள் போல் வீரத்துடன் வாழுவதற்கு முடிவு செய்ய வேண்டும். எலியின் உள்ளத்தையும் புலியின் உள்ளத்தையும் ஒப்பிட்டுக்காட்டுகின்ற புறநானூற்றுப் பாடலையே இப்பொழுது நான் உங்களுக்கு விளக்கிக் கூறினேன்.

"விளைபதச் சீறிடம் நோக்கி வளைகதிர்
வல்சி கொண்டு அளை மல்க வைக்கும்
எலிமுயன் றனைய ராகி உள்ளதம்
வளன்வலி யுறுக்கும் உரமி லாளரொடு
இயைந்த கேண்மை இல்லா கியரோ,
கடுங்கண் கேழல் இடம்பட வீழ்ந்தென
அன்று அவண் உண்ணா தாகி விழிநாள்
பெருமலை விடரகம் புலம்ப வேட்டெழுந்து
இருங்களிற்று ஒருத்தல் நல்வலம் படுக்கும்
புலிபசித் தன்ன மெலிவில் உள்ளத்து
உரனுடை யாளர் கேண்மையொடு
இயைந்த வைகல் உளவா கியரோ."

இது தான் அந்தப் பாடல். பன்னூறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண்டுகளுக்கு முன்னர் சோழன் நல்லுருத்திரன் எனும் புலவர் பெருமான் தீட்டிய சொல்லோவியமே இப்பாடல்.

எலிபோன்று மெலிந்த உள்ளம் - ஊக்கம் இல்லாதவருடைய நட்பு வேண்டாம். புலி போன்று மெலிவில்லாத உள்ளம் - ஊக்கம் உடையவருடைய கேண்மையே வேண்டும் என்று புலவர் கூறுகிறார். மக்களின் மானத்தையும், முயற்சியையும், பொருளீட்டும் நெறியையும் அடிப்படையாகக் கொண்டு அவர்களை எலிகளாகவும் புலிகளாகவும் பிரித்து அவர்களின் இயல்புகளை அன்றே எடுத்துரைத்துள்ளார் இப் பெரும்புலவர்.

யானையுடன் ஒப்பிடும் பொழுது புலி சிறியதொரு மிருகம். யானை மிருகங்களுக்குள்ளே பெரியது. கூரிய கொம்புகளை உடையது. எனினும் புலிக்கு அஞ்சும் என்று வள்ளுவர் கூறுகிறார்.

**'பரியது கூர்ங்கோட்ட தாயினும் யானை**
**வெரூஉம் புலிதாக் குறின்'**

என்பது வள்ளுவர் வாக்கு. பெரிய யானை ஏன் புலிக்கு அஞ்சுகிறது? புலியின் ஊக்கமும் மான உணர்வுமே யானையை அஞ்சச்செய்கிறன.

எனவே ஊக்கமுடையவர்களாக நீங்கள் மிளிர வேண்டும். மக்களுடைய உயர்வு அவர்களுடைய ஊக்கத்தையே பொறுத்துள்ளது. இதனாலேயே வள்ளுவர் பெருமான் உள்ளத்தின் பண்பாகிய ஊக்கத்தையே உள்ளம் என்று பல குறள்களில் குறிப்பிட்டு ஊக்கத்தின் உயர்வை விளக்குகிறார். ஊக்கமில்லாதவர்கள் உள்ளமில்லாதவர்கள் ஆவர். இதனைச் சோழன் நல்லுருத்திரனும் "உள்ளதம் வளன் வலியுறுக்கும் உளம் இலாளர்" என்று குறிப்பிட்டுள்ளார்.

ஒரு குளத்திலேயுள்ள நீர்ப்பூக்களின் தண்டுகள் அக்குளத்தில் உள்ள நீரின் அளவிற்கேறப நீண்டிருக்கும். இதைப்போல மனிதர்களுடைய உயர்வும் அவர்களுடைய உள்ளத்தின் உயர்வையே - ஊக்கத்தையே பொறுத்துள்ளது.

**'வெள்ளத் தனைய மலர்நீட்டம் மாந்தர்தம்**
**உள்ளத் தனையது உயர்வு"**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று வள்ளுவர் கூறுகிறார். நீங்கள் எதனைப் பெறத்தவறினும் உயர்ந்த உள்ளத்தைப் பெறத் தவறாதீர்கள். உயர்ந்த உள்ளம் எல்லாவற்றையும் தரும். இந்தத் திருக்குறளுடன் இன்னுமொரு திருக்குறளையும் நீங்கள் மறவாமல் அதன்படி வாழல் வேண்டும்.

**'உள்ளுவ தெல்லாம் உயர்வுள்ளல் மறந்து**
**தள்ளினும் தள்ளாமை நீர்த்து'**

இதை நீங்கள் மேற்கொண்டொழுகினால் உங்கள் இனத்தையே நீங்கள் உயர்த்துபவராவீர்கள். நீங்கள் எண்ணுவதெல்லாம் உயர்வைப்பற்றியே இருக்க வேண்டும். அடிமைகளாய், மானமிழந்தவர்களாய், பிறர் தயவில் இருப்பவர்களாய் வாழ எண்ணாமற் சான்றோராய் - பண்புடையவர் களாய் - வீரர்களாய்த் தலைநிமிர்ந்து வாழ எண்ணல் வேண்டும். நீங்கள் எண்ணியது கிடைக்காவிடினும் உங்களுடைய உயர்ந்த எண்ணத்தை விட்டுவிடல் கூடாது. உங்களுடைய எண்ணம் திண்ணியதாக இருந்தால் நீங்கள் எண்ணியதைப் பெறலாம் என்று வள்ளுவர் பெருமான் கூறுகின்றார்.

நன்றி
**தமிழ் உணர்ச்சி நூல்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு மொழியில் பிறமொழி எழுத்தைப் புகுத்தலாமா?

பிறமொழி எழுத்தோசைகள் சிலவற்றைக் குறிக்கும் எழுத்துகள் தமிழில் இல்லை என்பதற்காகப் பிறமொழி எழுத்தைக் கலந்தெழுதும் வழக்கத்தைத் தமிழ்மொழியிற் புகுத்தச் சிலர் முயன்றனர். இதற்குக் கிரந்த எழுத்தைப் பயன்படுத்தினர். வேறெம்மொழியிலேனும் பிறமொழிக்கேயுரிய எழுத்தைக் கலந்து எழுதுகின்றார்களா? ற, ன, ழ, எ, ஒ எனும் தமிழ் எழுத்துக்கள் ஆரிய மொழியில் இல்லை. ஆரிய மொழியில் இந்த எழுத்துக்களைக் கலந்து எழுதுகிறார்களா? ஆங்கிலேயர் தமிழ், ஆங்கிலம் கலந்து என்றோ எழுதுகின்றார்களா? யாரேனும் இவ்வாறெழுதின் அது நகைப்புக்கிடமாகும். நடராஜா, லக்ஷ்மணன் என எழுதுவதும் இத்தகையதே.

ஆங்கில மொழியில் உள்ள F எனும் எழுத்துத் தமிழ் மொழியில் இல்லை. எனவே இந்த எழுத்தையும் புகுத்தி F ரான்ஸ் என்று ஏன் எழுதக்கூடாது? கிரந்த எழுத்தைக் கலந்தால் ஆங்கில எழுத்தையும் கலக்கலாமன்றோ? யாழ்ப்பாணம், பூனகரி, மதுரை, போன்ற சொற்கள் ஆங்கில மொழியில் "யாவ்னா" (Jaffna), "பூனரின்" (pooneryn), "மடுரா" (madura) என ஆளப்பட்டுள்ள இவை சீர்திருந்திய மொழியினர் யாவரும் பிறமொழிச் சொற்களை மொழி பெயர்க்காமல் வழங்கும் பொழுது அவற்றைத் தம் மொழியோசைப்படுத்தியே வழங்குகின்றனர் என்பதை நன்கு காட்டுகின்றன எனவே தமிழிலும் இதனைக் கடைப்பிடிப்பதை மொழியியல்பு அறியாதவர்களும், மொழிப்பற்று அற்றவர்களுமே எதிர்க்க முயல்வார்கள்.

**முனைவர் கா.பொ இரத்தினம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிறமொழிச் சொற்களைத் தமிழோசைப்படுத்தி ஆளல் வேண்டும்

பிறமொழிச் சொற்களைத் தமிழோசைப்படுத்தி ஆளாவிடில் தமிழ் உரைநடையில் அவற்றை அமைத்து எழுதும் பொழுது அவை உருபு முதலியவற்றுடன் புணர்தல் சாலாது. "தோமஸ்" "சிமித்" எனும் பெயர்களை இவ்வாறே நிறுத்தி "கு" உருபுடன் புணர்த்தினால் "தோமஸ்கு", "சிமித்கு" என்றுதான் அமையும். இவை பிறமொழிச் சொற்கள் ஆகையால் தமிழ் இலக்கண விதிப்படி புணர்த்தல் முடியாது இவற்றைப் புணர்த்த வேண்டுமாயின் "தோமசு" "சிமிது" எனத் தமிழுருவாக்கி "தோமசுக்கு", சிமிதுக்கு" என்று புணர்த்தல் வேண்டும். தோமசை , சிமிதை, தோமசின், சிமிதின் என்ற இவ்வுருவங்களிலே பிறமொழி ஓசை உருவம் சிதைந்து தமிழ் ஓசை உருவமே நிலைக்கின்றது. Thomas, Smith எனும் சொற்களை அறியாத தமிழன் ஒருவன் தோமசின், சிமிதின், எனும் சொற்களில் உள்ள உருபை நீக்கி தோமசு,சிமிது எனக்கொள்வானேயன்றி "தோமஸ்" எனவும் "சிமித்" எனவும் கொள்ளான். ஆங்கிலத்தை நன்கறிந்த தமிழர்களே இவற்றின் ஆங்கில மூல உருவம் தோமஸ், சிமித் என்பதை அறிவர்.

எனவே பிறமொழிச்சொற்களைத் தமிழோசைப்படுத்தியே வழங்கல் வேண்டுமென்பதை மேலும் வற்புறுத்த வேண்டியதில்லை. இன்று கிரந்த எழுத்துக்களைக் கலந்து தமிழோசையைச் சிதைத்தும் பிறமொழிச் சொற்களின் ஓசையைச் சிதைக்காமலும் தமிழிலே கலைச்சொற்களை ஆள வேண்டுமென்று கூறுபவர்களிலே பலர் ஆங்கிலத்தை நன்கு பயின்றவர்கள் ஆங்கிலத்தில் நினைப்பவர்கள் ஆங்கிலச் சொற்களை எண்ணிக்கொண்டு தமிழ்ச்சொற்களிடம் அணுகுபவர்கள். இவர்களுக்குத் தமிழோசைப் படுத்தப்பட்ட சொற்களின் விகாரம் ஆங்கில மொழி பயின்ற செவிகளுக்குப் பொருந்தாமலிருப்பது இயற்கையே.

தமிழ் மொழிபெயர்ப்பு நூல்கள் யாருக்காக எழுதப்படுகின்றன? ஆங்கிலம் பயின்றவர்களுக்காகவா? தமிழ் பயின்றவர்களுக்காகவா?


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆங்கிலம் பயிலாது தமிழ் பயின்று தமிழிலே பல்வகைப் பாடங்களையும் படிக்கின்றவர்கள் முதலிலே தமிழோடு இசைப்படுத்தப்பட்ட சொற்களையே அறிவர். பின்னர் ஆங்கில அறிவு பெற்று ஆங்கில நூல்களையும் சேர்த்துப்பயிலும் வாய்ப்புக் கிடைத்தால் அவர்களுக்குத் தமிழோசைப்பபடுத்தப்பட்ட சொற்களின் வேறுபாடு உள்ளத்திற் படாது. தமிழிலிருந்து ஆங்கிலம் முதலிய மொழிகளை அணுகுபவர் இத்தகைய சொற்களையே விரும்புவர். இத்தகைய சொற்களே அவர்கள் உள்ளத்தில் இலகுவிற் பதியும். முதலில் ஆங்கிலம் படியாது தமிழ் படித்தவர்கள் தாவீது, கோலியாத்து என்று தாங்கள் படித்த சொற்கள் ஆங்கிலத்தில் டேவிட் கோலியாத் என்று உச்சரிக்கப்படுவன என்பதை அறியும் பொழுது எவ்வித வெருட்சியோ, மருட்சியோ கொள்வதில்லை. இங்கிலாந்து, ஐரோப்பா, அவுஸ்திரேலியா முதலிய சொற்களைத் தமிழ் வாயிலாக அறிந்தவர்கள் பின்னர் இவற்றைக் குறிக்கும் ஆங்கிலச் சொற்களை அறியும் பொழுது எவ்வித இடர்பாடுமின்றி இருமொழிச் சொற்களையும் ஒன்றுபடுத்தி அறியலாம்.

முனைவர் கா.பொ இரத்தினம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நான் ஆசிரியரானால்

**புலவர் மா.பேபிசரோயா**
**தமிழ் ஆசிரியை (ஓய்வு)**

***முன்னுரை:***

எழுத்தறிவித்தவன் இறைவன் ஆகும். என்கிறார் தமிழ் மூதாட்டி ஔவைப் பிராட்டி. கண்ணெனத்தகும் எண்ணையும் எழுத்தையும் கற்பிக்கும் ஆசிரியப்பணியையே நான் விரும்புகிறேன். மாதா, பிதா, குரு தெய்வம் என்பர். பெற்றோருக்கு அடுத்தபடியாக நம் வணக்கத்திற்கு உரியவராக விளங்குபவர் குருவே. குரு என்பது வடசொல். "கு" என்றால் இருள். குரு என்றால் அஞ்ஞான இருளை ஒழிப்பவன் என்பது பொருள். முற்காலத்தில் "நன்றாக குரு வாழ்க, குருவே துணை" என்று மாணாக்கர் குருவை வணங்கி விட்டுத்தான் கற்கத் தொடங்குவர். சமுதாயத்தில் அனைவராலும் மதிக்கப்படக் கூடிய தொழில் ஆசிரியப்பணி. நான் ஆசிரியரானால் என் பணியை எங்ஙனம் செய்வேன் என்பதை இக்கட்டுரையில் காண்போம்.

***ஒழுக்கம்:***

கல்வியும் ஒழுக்கமும் ஒரு மனிதனுக்கு இரு கண்களைப் போன்றவை. ஒழுக்கமில்லாத கல்வி மணமில்லாத மலருக்கு ஒப்பாகும். எனவே நான் என் மாணாக்கர்க்கு முதற்கண் ஒழுக்கத்தைத்தான் போதிப்பேன். கசப்பு மருந்தைக் குழந்தைக்குத் தாய் இனிப்பான தேனில் கலந்து கொடுப்பதைப் போல நல்ல கதைகள் வாயிலாக, புராண இதிகாசங்களில் வரும் சிறந்த கதாபாத்திரங்களின் வாயிலாக ஒழுக்கத்தின் உயர்வை மாணவர் உள்ளம் கொள்ளும் வகையில் நாளும் கூறி ஒழுக்கத்தை உயிரினும் மேலாய் மதிக்கச் செய்வேன்.

***கல்வி:***

கற்க வரும் மாணாக்கர்க்கு கல்வி ஒரு சுமையாய் தோன்றாத படி சுவையாய் இருக்குமாறு கற்பிப்பேன். வகுப்பில் எந்தப் பாடத்தைக் கற்பிக்கப் புகுகிறோமோ அந்தப் பாடத்தைத் கற்பிப்பதற்குரிய சூழலை வகுப்பில் உருவாக்கி மாணாக்கரின் ஆர்வத்தைத் தூண்டி விட்டுக், கற்பிக்கும் போதே சிறு சிறு வினாக்கள் மூலம் அவர்கள் எந்த அளவிற்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புரிந்து கொண்டிருக்கிறார்கள், கவனிக்கிறார்கள் என்பதையும் சோதித்து அறிந்து கொள்வேன். அதற்கேற்பப் பாடத்தைத் தொடர்வேன்.

*வீட்டு வேலை:*

வகுப்பு முடிந்தபின் நடத்திய பாடத்தில் எளிய வினாக்கள் கொடுத்து மறுநாள் அவற்றிற்கு விடை எழுதிக் கொண்டும் படித்துக் கொண்டும் வரும்படி சொல்வேன். மறுநாள் வகுப்பைத் தொடங்குமுன் எல்லாரும் எழுதியுள்ளனரா என்று பார்த்து விட்டு ஓரிரு வினாக்களைக் கேட்ட பிறகே புதிய பாடத்தைத் தொடங்குவேன்.

*வகுப்பில் அமைதி:*

வகுப்பில் ஆசிரியர் இருந்தாலும் இல்லா விட்டாலும் மாணவர் அமைதி காக்க வேண்டும் என்பதை வலியுறுத்துவேன். ஓராசிரியர் வகுப்பை விட்டுச் சென்ற பின் மற்றோர் ஆசிரியர் வருவதற்குள் - அந்த இடைப்பட்ட நேரத்தில்த்தான் வகுப்பில் சலசலப்பு அதிகம் இருக்கும். ஆகையால் வகுப்புத் தலைவனிடம் சொல்லி வகுப்பைக் கண்காணிக்கச் செய்வேன். தவறிப் பேசியவர்களிற்குச் சிறிய அளவில் தண்டனையும் தருவேன். தண்டனை என்று நான் குறிப்பதுஅடியோ உதையோ அன்று. ஆங்கில, தமிழ் மனப்பாடச் செய்யுள்களை - நடத்தியிருப்பவற்றை - ஒவ்வொன்றையும் மூன்று முறை எழுதி வரச் சொல்வேன். இந்தத் தண்டனையினால் இரட்டிப்பு இலாபம். பலமுறை பார்த்து எழுதும் போது பிழையின்றி எழுதக் கற்கின்றனர். எளிதில் மனப்பாடமும் ஆகிவிடுகிறது. அத்துடன் தண்டனைக்குப் பயந்து வகுப்பில் வாய் திறக்காமல் அமைதி காப்பார். நான் எக்காரணம் கொண்டும் மாணவர்களுக்கு அபராதம் விதிக்க மாட்டேன். அது பெற்றோர்க்கு தண்டனையாக அமையும். பெற்றோரிடம் கேட்டு வாங்கி வந்து காசைக் கொடுத்து விடுவதால் அவர்களை அது அதிகம் பாதிப்பதில்லை.

*விளையாட்டு:*

மாணாக்கர் கல்வி மூலம் மனவளம் பெறுவது போல் விளையாட்டு மூலம் உடல் வளமும் பெற வேண்டும் என்பதை எடுத்துச் சொல்லி விளங்க வைப்பேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதனால்த் தான் பாரதி "காலை எழுந்தவுடன் படிப்பு" என்று கூறிவிட்டு "மாலை முழுதும் விளையாட்டு" என்றார் என்பதை எடுத்துரைப்பேன். இளைஞர் எஃகு நரம்பும், ஏக்கழுத்தும் பீடு நடையும் தடைபடாக் குருதி யோட்டமும் உடையவராய் இருத்தல் வேண்டும் என்று கூறும் திரு.வி.க.வின் கருத்தையும் கூறுவேன். அத்தகு உடலுறுதி பெற வழிகோலுபவை உடற்பயிற்சியும், விளையாட்டுமே என்பதை மாணாக்கர் உணரச் செய்வேன். விளையாட்டிலும் அவர்களை ஆர்வம் கொள்ளச் செய்வேன்.

***காலந்தாழ்த்தாமை:***

மாணாக்கர் பள்ளிக்கு காலந்தாழ்த்தி வருவதை வன்மையாகக் கண்டிப்பேன். காலைப் பிரார்த்தனைக்கு அனைவரும் கண்டிப்பாக ஆஜராக வேண்டும் என்று வற்புறுத்துவேன். வராத மாணாக்கர்க்கு அபராதம் உண்டு. அபராதம் என்றால் காசு அன்று மூன்று நாள்கள் காலந்தாழ்த்தி வந்தால் வருகைப் பதிவேட்டில் ஒரு நாள் வராமைக்குறி இடப்படும். அது தான் அபராதம். ஆண்டு முழுவதும் விடுப்பு எடுக்காது, காலந்தாழ்த்தாது வந்துள்ள மாணாக்கர்க்கு ஆண்டு முடிவில் பரிசளிப்பேன். அதே போன்று காலாண்டு, அரையாண்டுத் தேர்வுகளில் முதல் மூன்று தகுதி பெறும் மாணாக்கர்க்கும் பரிசளித்து ஊக்குவிப்பேன். ஆண்டுத் தேர்வில் முதலாவதாக வந்தவர்களுக்குப் பள்ளியே பரிசு தரும்.

***முடிவுரை:***

குலன், அருள், தெய்வங்கொள்கை, கலைபயில் தெளிவு, கட்டுரை வன்மை, நிலம், மலை, நிறைகோள், மலர் நிகர் மாட்சி, உலகியலறிவு ஆகிய இவற்றை நல்லாசிரியருக்குரிய இலக்கணமாக நன்னூலார் கூறுகிறார். அவர் கூற்றுப்படி அவ் விலக்கணங்கள் யாவும் அமையப் பெற்றவர் என்று பிறர், கூறும் வகையில் நடந்து நல்லாசிரியனாய் விளங்குவேன். அரசின் நல்லாசிரியர் விருதினும் என்னிடம் பயின்ற - பயிலும் மாணாக்கர் "எங்கள் ஆசிரியர் நல்லாசிரியர்" என்று கூறுவதையே பெரிய விருதாக மதிப்பேன். அதற்கு எல்லாம் வல்ல இறையருள் கிட்ட வேண்டுமென்று வேண்டுகிறேன்.

நன்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேச்சாற்றலை வளர்ப்பது எப்படி

-கமலா கந்தசாமி-

பேச்சாற்றல் என்பது பிறவிக்கலையா? அல்ல. பேசத் தெரிந்த யாவருமே சிறந்த பேச்சாளர் ஆகமுடியும்.

எப்படி?

பயிற்சியால் தான்.

செந்தமிழ் நாப்பழக்கம் தான்.

மேடையில் பேச முதல் தகுதி அவைக் கூட்டம், நடுக்கம், அச்சம்- போன்றவற்றை விடுத்தல் வேண்டும். மனதில் துணிவு வேண்டும். அச்சம் இருப்பின் பேச்சில் நடுக்கம், மறதி ஏற்படும்.

தொடக்கத்தில் அவை நடுக்கம் ஏற்படுவது குற்றமல்ல. இயல்பே. பேசிப் பேசித்தான் கூச்சம், பயம் போகும்.

தொடக்க காலத்தில் எழுதி - மனப்பாடம் செய்து பேசலாம். அது படித்ததை ஒப்புவித்தல் போல இருத்தல் கூடாது. நிறுத்தி.... ஏற்ற இறக்கம், மெய்ப்பாடு உடன் பேசிட வேண்டும். அறையில், தனிமையில் வாய்விட்டு பலமுறை பேசிப்பழக வேண்டும்.

எழுதி வைத்துக்கொண்டு, அதைப்பார்த்துப் பேசுதல் பேச்சன்று. அதுபடிப்பு.

முதலில் சிறுசிறு குறிப்புகள் வேண்டுமானால் வைத்துக்கொள்ளலாம். பிறகு கொஞ்சம் கொஞ்சமாக குறிப்பும் இல்லாது பேசுதல் நல்லது.

பேசுதற்குத் துணை?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறைய படிக்க வேண்டும். கருத்துக்கள் - நல்ல சொற்கள் களஞ்சியமாக உங்கள் கனவு இருக்க வேண்டும்.

கூடவே நினைவாற்றல் தேவை. சந்தர்ப்ப அறிவு அவசியம். நகைச்சுவை உணர்வு அவசியம். பொருத்தமான குட்டிக்கதை சேகரம் செய்து தகுந்த இடத்தில் சொல்லலாம்.

நல்ல பேச்சாளர்களின் பேச்சை நிறைய அடிக்கடி கேட்க வேண்டும். இயல்பாகப் பேச வேண்டும். மிக அதிசயமாக கையை அசைத்தல், அதிக கர்ச்சனை, திரைப்பட வசனம் போல பேசுதல் செயற்கைத்தன்மை நிறையும். அது தேவையில்லை.

கருத்தாழம் - சொல்நயம் - சொல் இனிமை - நல்ல உச்சரிப்பு - தங்கு தடையற்ற சரளமான வார்த்தை - வாக்கியப் பிரயோகம் அவசியம்.

பள்ளியில் தரப்படும் பேச்சுப்பயிற்சிக்கான, உச்சரிப்புப் பயிற்சிக்கான சில பயிற்சிகளை எடுத்துக் கொள்ளலாம்.

இது யார் தைத்த சட்டை?

என் தாத்தா தைத்த சட்டை!

இதனை வேகமாக திருப்பித்திருப்பி சொல்லிப் பாருங்கள். குழறாமல், தடுமாறாமல் பேச இது உதவும்.

"ஓடுற நரியில ஒருநரி கிழநரி
கிழநரி முதுகில ஒருமுடி நரைமுடி?"

இதனையும் சொல்லலாம் பழகலாம்.

"வாழைப்பழம், அழுகி, கொழகொழத்து
கையில் இருந்து நழுவி கீழே விழுந்தது?"

இது போன்ற "ழ" வருவது போல பேசிப்பார்க்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"வேலன் - வள்ளி இருவரும்
தேனும் - திணைமாவும் உண்டனர்?"

இதனை வேகமாக உச்சரித்துப் பழகலாம். ல-ள-ன-ண

ஆர்வம் - முயற்சி இருப்பின் நாம் நிச்சயம் "சொல்லின்

பொதுவாக சில குறிப்புகளை நாம் சுருக்கமாக இதுவரை கூறினோம்.

ஆயினும் பல கூட்டங்களில், பல தலைப்புகளில் பேசிப் பயிற்சி செய்து வந்தால் தான் சிறந்த பேச்சாளர் ஆகமுடியும்.

அதற்கான தகவல் - கருத்துகளை திரட்ட நமக்கு நேரம் இருப்பதில்லை. ஏதோ பேசி ஒப்பேத்துவோம் எனப் பேசுதல் கூடாது.

இது ஒரு "வழிகாட்டி" போல உங்களுக்குப் பயன்படும். இது பிறகு உங்களையும் மிகச்சிறந்த பேச்சாளராக அங்கீகரிக்க உதவிடும்.

**இறுதியாய் மேலும் சில**

நல்ல பேச்சாளர் ஆவதற்கு இரண்டு விசயங்கள் முக்கியமானவை. ஒன்று நீங்கள் நிறைய படிக்க வேண்டும். எது குறித்தும் பேசுவதற்கான அடிப்படை அறிவு உங்களிடம் இருக்க வேண்டும்.

அப்புறம் நிறைய நல்ல பேச்சாளர்களின் பேச்சைக் கேட்க வேண்டும். அதிர்ஷ்டவசமாக எனக்கு நிறைய நல்ல பேச்சாளர்களின் பேச்சைக் கேட்கும் வாய்ப்பு அன்று கிடைத்தது.

துரதிர்ஷ்டவசமாக இன்று உங்களுக்கு அந்த வாய்ப்பு கிடைக்க வழியில்லை. நல்ல இலக்கியக் கூட்டமும் இன்று இல்லை. நல்ல


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேச்சாளர்களும் இன்று இல்லை. இருக்கிற சிலரின் பேச்சில் அரசியல் நெடி, அரசியல் காழ்ப்புணர்ச்சி, வசவு, திட்டுதலே கலக்கிறது. அது உங்களுக்கு உதவாது.

சிலர்.... யால்ரா பேச்சாளர்கள். ஒருவரைத் தாழ்த்தி, ஒருவரைப் புகழ்ந்து முதுகு புண்ணாகும் வரையில் சொறிந்து விடும் பேச்சாளர். அவர்களாலும் உங்களுக்கு உதவியில்லை.

ஆன்மீகப் பேச்சில் கூட வாரியாருக்குப் பிறகு, "கணீர்" என்ற வெண்கலக் குரலில் பேசும் குன்றக்குடி அடிகளாருக்குப் பிறகு யாருமில்லை.....

போகட்டும்.

நீங்கள் உங்கள் குரலில் பேசுங்கள். மேடையில் பேசுவது என்றால் குரலை மாற்றி அண்ணா போல, கலைஞர் போல என்றெல்லாம் பேச வேண்டாம். அது மிமிக்ரி, பேச்சல்ல, இயல்பாய்... உங்கள் குரலில் நல்ல உச்சரிப்பில் பேசுங்கள்.

உங்களுக்கு என்று பேசுவதில் ஒரு தனியான பாணியைக் கையாண்டால் நல்லது.

எப்படி எழுத்தில் மு.வ.நடை - திரு.வி.க நடை... என்று இருக்கிறதோ.... அது போலவே பேச்சிலும் பெரிய பேச்சாளர்க்கு தனியான பாணி உண்டு. அது போல நீங்கள் உங்களுக்கு உருவாக்கிக் கொள்ள முயற்சியுங்கள்.

பேச்சு ஒன்றும் முடியாத செயல் அன்று. சித்திரமும் கைப்பழக்கம், செந்தமிழும் நாப்பழக்கம், பாடப்பட ராகம், பேசப் பேச பேச்சு.

மனதிற்குள் பேசிப்பாருங்கள். தனிமையில் பேசிப்பாருங்கள். பேருந்துப் பயணத்தில் யன்னல் ஓரமாக அமர்ந்து, விழி மூடி நீங்கள் பேச இருப்பதை மனதிற்குள் பேசிப்பாருங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்புறம் முதன் முதலில் பேச எழுதி, மனப்பாடம் செய்து பேசலாம்.

அடுத்த நிலை, சில குறிப்புகள் மட்டும் எழுதி வைத்துப் பேசலாம்.

இறுதி நிலை குறிப்பு இல்லாது பேசலாம்.

சிலர் நடிப்புப் போல, தேவை இல்லாது கைதூக்கி... அதிக செயற்பாடு செய்வார்கள். அது அசிங்கம். வேண்டாம். தேவையான இடத்தில் லேசான கையசைவு... முக பாவனை போதும். சிரித்த முகத்தோடு பேசுங்கள். "கணீர்" என்று ஏற்ற இறக்கத்துடன் பேசுங்கள். சில முக்கிய செய்திகளைப் பேசும் போது சற்று அழுத்தம்.... குரலை உயர்த்திப் பேசலாம்.

அப்புறம் நல்ல குட்டிக்கதைகளை சுருக்கமாக பேச்சில் சேர்க்கலாம். அதற்கான கதைகளைச் சேகரித்து மனதில் பதிய வையுங்கள். அதற்காக இந்த பட்டிமன்றப் பேச்சாளர்கள் ஊருக்கு ஊர் அரைத்த மாவையே அரைப்பது போல... புளித்துப் போன கேட்ட பழைய நகைச்சுவை எல்லாம் சொல்லிக் கொடுக்க வேண்டாம்.

பாட என்றால் கூட இயல்பான குரல் வளம் வேண்டும். பேச உங்கள் குரலே போதும்.... எல்லோரும் பிறவிப் பேச்சாளர் அல்லர்...

பயிற்சி – முயற்சி – ஆர்வம் போதுமே. இந் நூலில் நான் சொல்லியவை போதும் என்றே நினைக்கிறேன்.

இனி.....

நீங்கள் பேச்சாளர், சிறந்த கருத்தாளர், சொல்லின் செல்வர்! சரியா?

நன்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகாகவி பாரதி

**-கமலா கந்தசாமி-**

பாட்டுக் கொருபுலவன்! தமிழ் நாட்டுக்கும் இவனே பெரும்புலவன்! எட்டையபுரத்து எழுச்சிக்கவிஞன்! முண்டாசு.... முறுக்கிய மீசை.... கருப்புக்கோட்டு!

இருபெரும் விழிகளில் ஞான வெளிச்சம்! யார்க்கும் அஞ்சாத துணிவு - புலமை! இந்திய விடுதலைக்கு கவிதையில் போர் செய்தான்! சமூக சீர்திருத்தத்தை தமிழில் தொடங்கினான். "மகாகவி" எனும் அழியாப் புகழ் பெற்றான்.

பழமைக்கும் புதுமைக்கும் பாலமிட்டவன் பாரதி!

பக்திக்கும் பகுத்தறிவுக்கும் இணைப்புக் கண்டவர் பாரதி!

தமிழ் மொழி மீது அழியாத காதல்!

"யாம் அறிந்த மொழிகளிலேயே தமிழ் மொழி போல் இனிதாவது எங்கும் காணோம்" என்று பெருமிதம் கொப்பளிக்கப் பாடினான்.

"செந்தமிழ் நாடெனும் போதினிலே
இன்பத்தேன் வந்து பாயுது காதினிலே" என்று தமிழ் நாட்டைப் புகழ்ந்தான்.

கம்பன் - வள்ளுவன் இங்கே போல

பூமிதனில் கவிஞன் பிறந்ததில்லை" எனத் தமிழ்க் கவிஞர்களைப் புகழ்ந்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரத நாடு பழம் பெரும் நாடு
நீர் அதன் புதல்வர்
இந் நினைவகற்றாதீர்" என்று நாட்டுப்பற்றை நமக்கு ஊட்டினார்.

"ஒன்று பட்டால் உண்டு வாழ்வு
நம்மில்
ஒற்றுமை நீங்கின்
அனைவர்க்கும் தாழ்வே" என்று நம்மை எச்சரித்தான்.

"வாழ்க நீ எம்மான்" என மகாத்மாவை புகழ்ந்தான்."

"ஒளி படைத்த கண்ணினாய் வாவா" என்று புதிய சமுதாயத்தை அழைத்தான்.

"அச்சமில்லை அச்சமில்லை என்று கவிதையால் நமக்கு துணிவளித்தான்.

"தண்ணீர் விட்டா வளர்த்தோம்" எனக் கேட்டு சுதந்திரப் பயிரை கவிதைக் கண்ணீரில் வளர்த்தான்.

வீட்டில் வறுமை!

நாட்டையே நினைத்தான் பாரதி!

"காக்கை குருவி எங்கள் ஜாதி" என் சொந்தம் கொண்டாடியவர் பாரதி.

புதிய ருஷ்யாவை வரவேற்றான்.

மாஜினிக்கு மட்டுமல்ல, வேல்ஸ் இளவரசருக்கும் வாழ்த்து சொன்னான்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல் புதிது - பொருள் புதிதாய் நவகவிதை தந்தான் பாரதி.

புதிய ஆத்திசூடி - பாப்பா பாட்டு ஒன்று போதுமே!

நோபல் பரிசுக்குரிய கவிமன்னன். கவிச்சக்கரவர்த்தி பாரதி.

"யாம் அறிந்த கவிஞர்களில்
பாரதி போல்
உலகில் எங்கும் பிறந்ததே இல்லை!"
என்று நாம் பாடலாம்.
கண்ணன் பாட்டு எத்தனை அற்புதம்?
குயில் பாட்டில் எத்தனை தத்துவம்?
அழியாத் தமிழ்க் கவிஞன் பாரதி.

சில குறிப்புகள்.

தூத்துக்குடி மாவட்டம் எட்டயபுரம் பிறந்த இடம்.
தந்தை சின்னசாமி, தாய் இலக்குமி.
இயற்பெயர் சுப்பிரமணியன்.
11 வயதில் பாரதி (கலைமகள்) பட்டம்.

தமிழ்,ஆங்கிலம், பிரஞ்சு, வடமொழி, மலையாளம், பெங்காலி எனப் பல மொழிப் புலமை. சில காலம் தமிழ் ஆசான். சுதேசமித்திரன் பத்திரிகை ஆசிரியர். சில காலம் சிறையில் - சில காலம் புதுவையில்.

பிறப்பு: 11.12.1882
இறப்பு: 11.09.1921



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூல் பயில் இயல்புகள்

-சுகி சிவம்-

கல்வி பயிலும் மாணவர்களாயினும் சரி அல்லது மற்றவர்களாயினும் சரி, கல்விக்கென்று இலக்கண ஆசிரியர் வகுத்துள்ள ஏழு நிலைகளைக் கருத்தில் கொள்ளுதல் வேண்டும் அவை,

1. தாம் படிக்கும் பாடங்களை நடைமுறை வாழ்க்கை பட்டறிவுகளோடு பொருத்திப் பார்த்துப் பயிலுதல்.

2. படிக்கும் பாடங்களை அல்லது செய்திக் குப்பையைப் போல் படித்ததும் வீசி விடாமல் பொன் போன்று போற்றிப் பாதுகாத்தல்.

3. ஆசிரியரிடம் கேட்டவற்றை அவ்வப்போது நினைத்துப் பார்த்தல்.

4. உடன் பயில் மாணவர்களுடன் ஐயம் நீங்கு மாறு உரையாடுதல்.

5. புரியாதவைகளை உடன் பயில்வோரிடம் வினாவி விடை அறிதல்.

6. மற்றவர் தன்னை வினாவும் போது தெரிந்தவைகளை விளக்கமாகக் கூறுதல்.

7. செவியை வாயாகவும் நெஞ்சினைக் களனாகவும் கொண்டு ஆசிரியர் கூறுபவைகளை அப்படியே மனதில் நிலை நிறுத்துதல்.

**இந்த ஏழு நிலைகளைக் கடைப்பிடித்துக் கல்வி கற்போர், திறமையான மாணாக்கர்களாய் ஆக்கப்படுகிறார்கள்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# படிக்க... வெற்றிபெற...

-சுகி சிவம்-

**தேர்வுக்கு முன் பின்பற்ற வேண்டிய வழிகள்**

குட்டித்தியாகம்... தொலைக்காட்சிப் பெட்டியை ஒரு மாதத்திற்கு மூடிவிடுங்கள். உயர்ந்த மதிப்பெண் என்னும் நிலையான இடத்தைப் பிடிக்க தற்காலிக மகிழ்ச்சிகளை விட்டு விடுவது தவறல்ல.

முந்தைய ஆண்டு வினாத்தாள்களைக் குறைந்த பட்சம் 10 ஆண்டுகள் ஒன்றுவிடாமல். பயிற்சி செய்யுங்கள் எழுதிப் பாருங்கள்.

காலை ஐந்து மணி முதல் இரவு பத்து மணி வரை முழுமையாகப் படியுங்கள். சோர்வு ஏற்படும் போது கைவீசி உலாவுங்கள். விளையாடுங்கள்.

மாமிச உணவு வேண்டாம். நோன்பு இருந்தும் படிக்க வேண்டாம். நொறுக்குத் தீனியைத் தவிர்த்து. பழங்கள் பழச்சாறு சாப்பிடுவது நல்லது.

தேர்வு நாட்களில் மதியம் சற்று ஓய்வு எடுத்து விட்டு பின் படியுங்கள். வலிந்து தொடர்ந்து படிக்க வேண்டாம்.

எழுதி எழுதி படியுங்கள். தவறுகளை நீங்களே திருத்திக் கொள்வீர்கள்.

அரசு அறிவித்த அட்டவணைப்படி இடைஇடையேயிருக்கும் விடுமுறை நாட்களை மனதில் கொண்டு அப்பாடங்களை முழுமையாகத் தயாரிக்கத் தவறிவிடாதீர்கள்.

எளிமையான, உங்களுக்கு பிடித்த பாடத்தை சிறிது நேரம் படித்து விட்டு பிறகு கடினமான பாடத்தைப் படியுங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நண்பர்களோடு படிப்பதற்காக சொல்லி நேரத்தை விரயம் செய்து விட்டு ஏமாந்து விடாதீர்கள்.

உங்களுக்குத் தேவையான பொருட்கள் அனைத்தையும் தயார் நிலையில் வைத்துக் கொண்டு படித்தால் அவற்றைத் தேடுவதில் உங்கள் பொன்னான நேரம் வீணாகாது.

நினைவாற்றல் வளர என்று கண்ட கண்ட ராசாயன மாத்திரைகள் உண்ண வேண்டாம். வல்லாரைக் கீரை அல்லது அதை உளட்ளடக்கிய சித்த ஆயுள் வேத மாத்திரைகள், மருத்துவர் ஆலோசனைப்படி உண்ணலாம்.

நன்றி

படிக்க வெயிக்க நூல்

## காலம் கடத்தாதே!

ஒரு சமயம் நெப்போலியன் தன்னுடைய தளபதிகளை விருந்திற்கு அழைத்திருந்தான். குறிப்பிட்ட நேரம் நெருங்கி விட்டது. ஆனால், அவர்கள் யாருமே அந்த விருந்திற்கு வரவில்லை. அவன் சொல்லியிருந்த சரியான அந்த நேரத்தில் தனியாகவே உட்கார்ந்து உணவை உண்ண ஆரம்பித்துவிட்டான் நெப்போலியன்.

அவன் உணவருந்தி முடிவடையும் தருவாயில், தளபதிகள் ஒருவர் பின் ஒருவராக வந்துகொண்டிருந்தார்கள். உடனே நெப்போலியன் சாப்பாட்டு மேசையை விட்டு எழுந்து நடந்துகொண்டே, "என்னருமை தளபதிகளே! சாப்பிடும் நேரம் முடிந்து விட்டது. இப்போது வேலை செய்யும் நேரம் தொடங்கிவிட்டது! வாருங்கள், நாம் ஒரு நிமிடத்தைக் கூட வீணாக்காமல் காரியத்தில் ஈடுபடுவோம்!" என்றான்.

இதைக்கேட்டு பதில் எதுவும் போசமுடியாத தளபதிகள், தங்கள் காலி வயிற்றைத் தடவிக்கொண்டே, பசியோடு, 'காலம் கடந்து வந்ததால் ஏற்பட்ட பலனே இது' என்று கூறியவாறு, நெப்போலியனைப் பின்தொடர்ந்தார்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் மொழி போற்று

உலகில் பலமொழிகள் பேசப்படுகின்றன. ஆனால் நாம் பிறந்தது முதன் முதலாக பேசுவது நமது தமிழ் மொழியேயாகும். நமது தாய்மொழியை நமக்கு அறிமுகப்படுத்துபவர் தாய். அதானாலேயே தாயைப் பெருமைப்படுத்தும் வகையிலேயே தாய்மொழி என அழைக்கின்றோம்.

ஒருவர் பல மொழிகளையும் கற்று பன்மொழி வித்தராகவும் இருக்கலாம். ஆனால் அவர் உணர்வு பூர்வமான நேரங்களில் தன் தாய் மொழியையே பேசுவார்.

நாம் சாலையில் சென்று கொண்டிருக்கின்றோம். நமது காலை ஒருகல் பதம் பார்த்து விடுகிறது. உடனே நாம் "ஐயோ..... அம்மா" என்று தமிழிலேயே அலறுகின்றோம்.

உலகில் உள்ள அத்தனை மொழிகளும் நமக்குத் தெரிந்தாலும், அவற்றில் ஒரு மொழி கூட நமக்கு நினைவுக்கு வருவதில்லை.

நமக்கு மட்டுமல்ல. எந்த மொழியைத் தாய்மொழியாகக் கொண்டிருந்தாலும் அவர்களுக்கும் இதே நிலை தான். நமது தாய் மொழி தமிழாகும்.

"கல் தோன்றி மண் தோன்றாக் காலத்தே முன் தோன்றிய மூத்த மொழி தமிழ்மொழி" என்று பெருமைப்பட்டுக்கொள்கின்றோம். அத்தகைய சிறப்பு வாய்ந்தது தாய்மொழியாகும்.

இத்தகைய பெருமைமிக்க தாய்மொழியான தமிழை இன்று நாம் எந்த நிலையில் வைத்துள்ளோம். தமிழ், செம்மொழி ஆகிவிட்டது என்றும் பெருமைப் படுகின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் தமிழுக்குத் தரவேண்டிய மரியாதையை சிறிதளவும் கொடுக்கிறோமா என்றால் இல்லையென்று தான் சொல்ல வேண்டியுள்ளது.

"தமிழ் இனி மெல்லச்சாகும்" என்று சொல்லப்பட்ட வார்த்தை மிகச் சரியானதாகும். இன்னும் சொல்லப் போனால் "தமிழ் இனி வேகமாகச் சாகும்" என்றும் சொல்லும் நிலையில் தான் இன்றைய நிலை உள்ளது. என்பதை பட்டவர்த்தனமாகச் சொல்ல முடியும்.

உலகில் வேகமாக அழிந்து வரும் மொழிகளில் ஒன்றாக தமிழும் ஆகிடுமோ என்ற அச்சமும் நமக்குள் எழத்தான் செய்கிறது.

நம் தாய்மொழியான தமிழுக்கு ஏன் இந்த நிலை?

தமிழ் பேசினால் தங்களை ஏளனமாகப் பார்ப்பார்கள் என்ற எண்ணம் சில காலங்களுக்கு முன்னர் தமிழக மேல் தட்டு மக்களுக்கு இருந்தது. அதனால் அவர்கள் தங்கள் பிள்ளைகளை ஆங்கிலம் கற்பிக்கும் கான்வென்டுகளில் சேர்ந்து படிக்க வைத்தனர்.

பள்ளியிலும், வீட்டிலும் ஆங்கிலத்திலேயே படிக்க வேண்டும், பேச வேண்டும் என்ற கட்டுப்பாடுகள் வேறு. அதனால் அந்தத் தலைமுறையினர் தமிழ் தங்கள் தாய்மொழி என்பதையே மறந்து போயினர்.

அந்தப் பெற்றோர்கள் தங்கள் உறவினர்களுக்கு முன்னால்,

"எம் புள்ளைக்கு டமில்.... கொஞ்சம் கொஞ்சமாகத் தான் தெரியும்!" என்று பெருமையடித்துக் கொள்ளவும் செய்தனர்.

பிற மொழியை அறிந்தவர்கள்,
"எனக்கு பிரெஞ்சு...கொஞ்சம் கொஞ்சம் தெரியும்"
"எனக்கு லத்தீன்...கொஞ்சம் கொஞ்சம் தெரியும்" என்று சொல்வார்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் நம் தமிழ் நாட்டிலோ தாய்மொழியாகிய தமிழையே "கொஞ்சம் கொஞ்சம் தெரியும்!" என்று பெருமை பேசிக் கொள்ளும் கொடுமையை என்னவென்று சொல்வது?

சில காலங்களுக்கு முன்னால் இந்த நிலை. ஆனால் இன்று கீழ்த்தட்டு மக்கள் வரை இந்த நோய் பரவிவிட்டது என்று தான் சொல்ல வேண்டும்.

பிளாட்பாரத்தில் வாழும் முனியம்மாவின் ஐந்து வயது பையன் பள்ளிக்குச் சென்று திரும்பியிருந்தான். திடீரென்று முனியம்மா தன் மகனை "மொத்து மொத்து" என்று மொத்தினாள்.

பையன் வீறிட்டலறினான்.

அருகில் இருந்தவர்கள் முனியம்மாவிடம் காரணம்
கேட்டனர்.

முனியம்மா சொன்னாள்.

"பின்ன என்னாங்க.... பிள்ளைய கான்வெண்ட்ல படிக்க வச்சா வீட்டுக்கு வந்ததும் மம்மின்னு அழகா சொல்லாம" "அம்மான்னு அசிங்கமா கூப்பிடுதே! என்று அலுத்துக் கொண்டாள்.

முனியம்மாவை போல ஏகப்பட்ட முனியம் மாக்கள் இன்று உள்ளனர். இதில் முக்கியமானதொரு விஷயம் என்னவென்றால் அந்த முனியம்மாவுக்கு " ஏபிசிடி" என்ற ஆங்கில எழுத்துக்கள் கூடத் தெரியாது.

உலகின் பொது மொழி ஆங்கிலம் என்று ஆகிப்போன ஒன்று. அதனால் ஆங்கிலம் கற்பதில் தவறில்லை. ஆனால் அதற்காக தாய்மொழியான தமிழை தண்டிப்பது முறையாகுமா?

சாலையில் சென்று கொண்டிருக்கிறோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறைய விளம்பரப் போர்டுகளையும், சுவரொட்டிகளையும் பார்க்கின்றோம். சுவர்களில் எழுதப்பட்டுள்ள பெரிய பெரிய விளம்பரங்களையும் பார்க்கிறோம்.

அவற்றில் எவ்வளவு பிழைகள் மலிந்துள்ளன?

'ள' கரம் 'ழ' கரம் உச்சரிக்கத் திணறுவார்கள் என்ற நிலை மாறி, இன்று எழுத்துக்களில் கூட இந்தப் பிழைகள் ஏராளமாக மலிந்து போய்க் கிடப்பதைப் பார்க்கலாம்.

"பள்ளிக் கூடம் அருகில் உள்ளது. மெதுவாகச் செல்லவும்" என்று போக்குவரத்துச் சம்பந்தமான விளம்பரம் ஒன்று.

"பள்ளிக்குடம் அருகில் உல்லது. மெதுவாகச் செள்ளவும்" என்று எழுதி வைக்கப்படும் கொடுமையும் நாம் காண நேரிடுகின்றது.

இந்தக் கொடுமையெல்லாம் ஏன் ஏற்படுகிறது? "தமிழ் வேகமாகச் செத்துக் கொண்டிருக்கிறது!" என்பதைத்தான் இது காட்டுகிறது.

தமிழை செம்மொழியாக்கி விட்டோம். தமிழ் மிக உயர்ந்த சிம்மாசனத்தில் அமர்ந்து விட்டது என்று கர்வம் கொண்டு திரியும் தமிழ் ஆர்வலர்களும், தமிழ்த் தலைவர்களும் என்ன செய்து கொண்டுள்ளனர்.

தமிழ் உயிருக்குப் போராடி மூச்சு திணறிக் கொண்டிருக்கும் போது வந்து காப்பாற்றாதாவர்கள், தமிழ் செத்து விட்ட பிறகா வந்து காப்பாற்றப் போகின்றனர்?

இந் நிலைக்கு காரணம் என்ன?

மக்களின் தீராத ஆங்கிலப் போக்கும், புற்றீசல் போல பெருகி விட்ட தனியார் கல்வி நிலையங்களும் தான் காரணம் என்று சொல்ல வேண்டும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாய்மொழிப் புறக்கணிப்பை எப்படி சரி செய்வது?

இதனை முற்றிலும் களைவதற்கு அரசியலாரும், ஆசிரியர்களும், பெற்றோர்களும், மாணவர்களும் முன்வர வேண்டும். தாய்மொழி வாயிலாகவே மாணவர்களுக்கு கல்வி போதிக்கப்பட வேண்டும்.

தமிழாசிரியர்கள் மாணவர்களுக்கு தமிழின் மீது ஆர்வத்தை உண்டு பண்ண வேண்டும். தமிழைக் கற்றுக் கொடுக்கும் ஆசிரியர்கள் தமிழில் நல்ல புலமை கொண்டவர்களாக இருக்க வேண்டும். புதிய புதிய முறைகளில் தாய் மொழியாம் தமிழைக் கற்றுக் கொடுக்கும் பயிற்சிகளையும் ஆசிரியர்கள் செய்ய வேண்டும்.

மாணவர்கள் தாய்மொழியாம் தமிழில் கல்வி கற்க முன்வர வேண்டும். எந்த ஒரு சூழ்நிலையிலும் நாம் தாயை மறப்போமா? அது போல நாம் தமிழையும் நினைக்க வேண்டும். தாய்க்கு கொடுக்கும் மரியாதையையும், முக்கித்துவத்தையும் தமிழுக்கும் கொடுக்க வேண்டும்.

ஆகையால் மாணவர்களே! தமிழ் வாழ்வதும் சாவதும் உங்கள் கைகளில் தான் உள்ளது. தாய்மொழி போற்றுவோம். தமிழைக் கற்போம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வான் மறை தந்த ஐயன் வள்ளுவர்

நீங்கள் தமிழன் பெருமை குறித்து பேசினாலும், தமிழ் இலக்கியம், அறநூல், தமிழ்ப்பெருமை என எது குறித்து பேசினாலும் நீங்கள் வள்ளுவர் பற்றி பேசலாம், பேசவும் வேண்டும். எந்த தலைப்பிற்கும் நீங்கள் திருக்குறளை மேற்கோள்காட்டலாம். அத்தனை பெருமை குறளுக்கு உண்டு.

இன்று சென்னையில் வள்ளுவர் கோட்டம், மைலாப்பூரில் நினைவிடம், மெரினாவில் சிலை, கன்னியாகுமரியில் 133 அடி உயர அற்புத சிலை!

வள்ளுவர்க்கு தமிழக அரசு நிறையவே சிறப்புத் தருகிறது. திருவள்ளுவர் பெயரில் விருது, தைத்திங்களில் திருவள்ளுவர் தினம்... இவையெல்லாம் வள்ளுவர்க்கு நாம் செய்திடும் திறப்பு. காட்டும் நன்றி.

*"வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து*
*வான்புகழ் கொண்ட தமிழ்நாடு"*

என்று வள்ளுவனால் நம் நாட்டுக்கே பெருமை என்றவன் பாரதி "யாம் அறிந்த புலவரில் வள்ளுவன் போல் இல்லை" என்றும் புகழ்வான் பாரதி.

திரு + குறள் + பா என்பதே திருக்குறட்பா இரண்டடி வெண்பாவால் ஆனது. இது பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் ஒன்று. 2000 ஆண்டுகளுக்கு முன்பு எழுதப்பட்ட அற்புதநூல். இது உலகப் பொது மறை மதம் - இனம் - சாதி - நாடு - மொழி கடந்த மனித நீதி இலக்கியம். அறநூல் – தமிழர் திருமறை.

ஆங்கிலம், லத்தீன், கிரேக்கம், ருஷ்யமொழி என பலமொழிகளில் மொழி பெயர்க்கப்பட்ட அற்புத நூல்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“ஆலும் வேலும் பல்லுக்குறுதி
நாலும் இரண்டும் சொல்லுக்குறுதி”

என்பது இதன் சிறப்பை உணர்த்தும். நாலு என்பது நாலடியார். இரண்டு என்பது குறள்.

மேலும்,

“நாலடி இரண்டடி கற்றவரிடம், வாயடி கையடி செல்லாது” என்பதும் இதன் சிறப்பை விளக்கும்.

திருவள்ளுவர் பிறந்த ஆண்டு கி.மு 31. பலர் பல கருத்தைக் கூறினாலும், ஆய்வுக்குப் பின்பு பல அறிஞர்களின் ஏற்புடைக்கருத்து அது முதல் திருவள்ளுவர் ஆண்டு என்றும் கணக்கிடப்படுகின்றது. இதனை எப்படி கணக்கிடுவது என்றால் தற்போதைய ஆண்டோடு 31 என்பதைக் கூட்டினால் வள்ளுவர் ஆண்டு வரும். உதாரணமாக இந்த 2010 ஆம் ஆண்டு என்று 2010 + 31 - 2014 என்பது வள்ளுவர் ஆண்டு.

*"வள்ளுவனைப் பெற்றதால்
பெற்றதே புகழ் வையகமே"*

என்பார் பாரதிதாசன்.

வள்ளுவனால் தமிழ்நாடு மட்டுமல்ல, இந்தியா மட்டுமல்ல உலகமே புகழ்பெற்றது என்பார் கவிஞர்.

முப்பால்,பொய்யாமொழி, வாயுறை வாழ்த்து, உத்தரவேதம், தெய்வநூல், திருவள்ளுவம், தமிழ்மறை, பொதுமறை, பொருளுரை, முதுமொழி, இப்படி குறளுக்கு எண்ணற்ற பெயர் உண்டு.

திருவள்ளுவருக்கும்

ஐயன், தமிழ்முனிவர், திருவள்ளுவ நாயனார், தேவர், முதற்பாவலர், தெய்வப்புலவர், நான்முகனார், மாதானுபங்கி, செந்நாப்போதார், பெருநாவலர், பொய்யில்புலவர்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று பல பெயரும், பல்புகழும் வள்ளுவர்க்கே!

அந்தகாலத்திலேயே குறளுக்கு தருமர், மணக்குடவர், தாமத்தர், நச்சர், பதிதி, பரிமேலகர், திருமலையர், மல்லர், கவிப்பெருமாள், காளிங்கர் எனப் பல அறிஞர்கள் உரை எழுதினார்கள். அதில் பரிமேலழகர் உரை மிகச்சிறந்ததாகும்.

இன்று மு.வ. கலைஞர், பாரதிதாசன் எனப் பலரும் உரை எழுதியுள்ளனர். கலைஞர் குறளோவியம் என கதை போல, கவிநடையில் சில குறளுக்கு விளக்கம் எழுதினார்.

பல ஆய்வு நூல்கள் திருக்குறள் பற்றி வந்து கொண்டேயிருக்கின்றன.

"கடுகைத் துளைத்து ஏழ்கடலைப் புகட்டியது"

"அணுவைத்துளைத்து ஏழ்கடலைப் புகட்டியது" என்றெல்லாம் இதன் பெருமையைக் கூறுவார். ஒன்றே முக்கால் அடியில் உலகம் அளக்கும் பாடல்கள் இதன் சிறப்பு.

133 அதிகாரம். ஒரு அதிகாரத்திற்கு பத்து பாடல்கள் மொத்தம் 1330 குறட்பா.

அறத்துப்பால் - பொருட்பால் - இன்பத்துப்பால் என்று மூன்று பிரிவுகள்.

"தினையளவு போதாச்சிறுபுல் நீர் நீண்ட
பனையளவு காட்டும் படித்தால்"
என்று கபிலர் இதனைச் சிறப்பிப்பார்.

வள்ளுவமும் தம்குறள் பாவடியால் வையத்தார்
யீஉள்ளுவதெல்லாம் அளந்தார் ஓர்ந்து"
என்று பரணர் பாடிச்சிறப்பித்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"உள்ளு தோறுள்ளுந்தோறுள்ளம் உருக்குமே
வள்ளுவர் வாய்மொழி மாண்பு"

இது மாங்குடி மருதனார் சொல்லும் சிறப்பு.

இப்படிப்பட்ட அறநூலைப் படைத்த வள்ளுவர் பற்றி நாம் அதிகம் அறியமுடியவில்லை.

இவர் சென்னையை அடுத்த மைலாப்பூரில் வாழ்ந்தார். நெசவுத் தொழிலை செய்தார். மனைவி வாசுகி..... என்பதெல்லாம் செய்தியே.....

கடவுள் வாழ்த்தோடு குறள் தொடங்கும். ஆயினும் வள்ளுவர் கடவுள் என்ற சொல்லை திருக்குறளில் பயன்படுத்தவே இல்லை. ஒரு சில வடசொல் தவிர நிறைய தமிழ் சொல் கலந்த நூல் இது.

*"அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு"*

இது முதற் குறட்பா. எழுத்துக்கு முதன்மை "அ"
உலகின் முதன்மை இறைவன் என்பார் வள்ளுவர்.

ஆயினும்
*"வையத்துள் வாழ்வாங்கு வாழ்வான். வான்உறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்"*

என்றும் கூறி மனிதனைத் தேவனாக வழிகாட்டுவார் வள்ளுவர்.

*"மழித்தலும் நீட்டலும் வேண்டாம் உலகம்
பழித்தது ஒழித்துவிடின்"*

என்கிற புரட்சிக்கருத்தையும் வள்ளுவர் கூறுவார்.

ஒழுக்கம் உயிரினும் மேல்.

அன்பின்றி உலகம் தழைக்காது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாய்மையே சிறந்த அறம்.

இன்சொல் பேசுக.

ஈகை புகழ் தரும்.

சோம்பல் வேண்டாம்.

பொறாமை வேண்டாம்.

கோபம் விடு....

இப்படி எண்ணற்ற சுய முன்னேற்றக் கருத்தினைக் கூறுகிறவர் வான் மறை வள்ளுவர் பெருமான்.

*"தெய்வத்தால் ஆகாது என்றாலும் முயற்சி நமக்கு வெற்றி தரும்" என்பார் வள்ளுவர்"*

நெருப்பில் வாழ்ந்தாலும் வாழலாம், வறுமையில் தூங்க முடியாது என்று கூறும் வள்ளுவர்....

*"இரந்தும் உயிர் வாழ்தல் வேண்டின்*
*பரந்தும் கெடுக உலகியற்றியான்"*

என்று கடவுளுக்கே சாபம் கொடுக்கும் புரட்சியாளர் வள்ளுவர்.

அறன் எனப்பட்டதே இல்வாழ்வு என்பார், விருந்தைப் போற்றுவார். நன் மகட்பேறே செல்வம் என்ற பல அற்புத நீதி சொல்வார்.

இன்பத்துப்பாடலில் அழகான வர்ணனை மூலம் அருமையான அகப்புற இலக்கியமாக்குவார் வள்ளுவர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருக்குறளில் இல்லாத சேதியும் இல்லை, கூறாத நீதியும் இல்லை.

இந்த ஒரு நூல் படித்தால் கூட உலகில் மேதையாகத் திகழலாம்!

ஒவ்வொருவர் வீட்டிலும் இருக்க வேண்டிய நூல்.... திருக்குறள்.

## தந்தையைத் திருத்திய அறிஞர்!

அறிஞர் பிளேட்டோ ஒரு சமயம் வீதியில் போய்க் கொண்டிருந்தார். ஒரு குழந்தை தெருவில் குறும்புத்தனம் செய்து கொண்டிருந்தது. அதைக் கண்ட பிளேட்டோ குழந்தையின் தந்தை யார்?" என்று விசாரித்தார். பின்னர் அவர் "குழந்தையின் தந்தையிடம் சென்று அவரைத் திருத்தினார்.

இதைப்பார்த்த சிலர் பிளேட்டோவிடம், "குறும்பு செய்த குழந்தையைத் திருத்தாமல், மாறாக குழந்தையின் தந்தையைத் திருத்தியதற்கு என்ன காரணம்? என்று கேட்டனர். அதற்கு பிளேட்டோ சொன்னார்: "குழந்தைகள் நல்ல முறையில் வளர்வதற்கு பெற்றோரே காரணமாகின்றனர். பெற்றோரைப் பார்த்தே குழந்தைகள் கற்றுக் கொள்கிறார்கள். தங்களிடம் நல்ல பண்பாடும், பழக்கவழக்கங்களும் அமையாமல், குழந்தைகளிடம் மட்டும் பெற்றோர் அவற்றை எதிர்பார்ப்பது வீணாகும்!" என்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவா பதிப்பகம், 05, கனகபுரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org